Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-08 | 24-08-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -188

2 4 AUG 2004

இல்வசம் [illegible]




# ஆயுதக்குழுக்களுக்கு ராணுவம் ஊக்கமளிப்பது

# போர் நிறுத்தத்திற்கு அபாயகரமான அச்சுறுத்தல்

## இருவிடுதலைப்புலிகள் உறுப்பினர் கொலைதொடர்பாக கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி)

**"சிறிலங்கா இராணுவம் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு ஒத்துப்போவதும், ஊக்கமளிப்பதும் போர் நிறுத்த உடன்படிக்கையின் சீரிய நிலைக்கும் இயல்பான தன்மைக்கும் அபாயகரமான அச்சுறுத்தலாக அமைகிறது" என மட்டக்களப்பில் அண்மையில் இரண்டு விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தைக் குற்றம் சாட்டி தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.**

அக்கடிதத்தின் தொகுப்பு வருமாறு;

மட்டக்களப்பு வாகரைக்குத் தெற்கே காயாங்கேணிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் மட்டு-அம்பாறை மாவட்டங்களின் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் பாவாவும், மட்டு-அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் யோகாவும் வீரச்சாவடைந்தனர். இத்தாக்குதலில் மகளிர் படையணி முக்கியஸ் தரான வேணுகா படுகாயமடைந்த அதே நேரம் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

இவர்கள் வாகரையில் இடம் பெற்ற யுனிசெப் மாநாடொன்றில் கலந்துவிட்டு வாழைச்சேனைக்கு திரும்புகையிலேயே இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

வழமையான நடவடிக்கையாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா சிதம்பரபுரம் காட்டுப்பகுதியில் இரு மனித எலும்புக்கூட்டு பாகங்கள் மீட்பு

(செட்டிகுளம்)

வவுனியா-சிதம்பரபுரம் காட்டுப் பகுதியில் இரண்டு மனித எலும்புக்கூட்டுப் பாகங்கள் நேற்று வவுனியாப் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

சிதம்பரபுரம் கிராம அலுவலர் கொடுத்த தகவலையடுத்து பொலிசார் இவற்றை மீட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஸ்தலத்திற்குச் சென்று இவற்றைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டார்.

இருபது மீற்றர் இடைவெளியில் கருகிய நிலையில் மண்டையோடு மற்றும் எலும்புத் தொகுதி என்பனவும் எரிந்த நிலையில் பெண்கள் அணியும் ஆடையும் மீட்கப்பட்டுள்ளன. சடலம் எரிக்கப்பட்டதற்கான அடையாளமாக அருகில் நின்ற மரங்களும் எரிந்துள்ளன.

எட்டு மாதத்திற்கு முன்னர் சிதம்பரபுரம் முகாமில் வசித்த பெண்ணொருவர் காணாமற் போனதாக பெண்ணின் சகோதரியொருவரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த எலும்புக்கூடுகளில் ஒன்று அப்பெண்ணினுடையதாக இருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

மற்றைய எலும்புக்கூட்டின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை இன்று சிறில் ஹேரத் சந்திப்பார்

சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில்ஹேரத் போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினரை இன்று சந்திக்கவுள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது சம்பூரில் தமிழீழ விடுதலைப்புலிகள் முகாம் அமைத்துவருவது தொடர்பாகவும், முல்லைத்தீவு கடற்பரப்பினூடாக ஆயுதங்களைக் கடத்தினார்கள் என்பது தொடர்பாகவும் குற்றம் சாட்டி பாதுகாப்புப்படையினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு மனு ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ளனர். அதே வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் நேற்று முன்தினம் திருகோணமலைக்குச் சென்று சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகளுடன் இது தொடர்பாக ஆராய்ந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தினர் மீதான தாக்குதல் தொடரின் புலிகளை எமது பகுதிக்குள் அனுமதியோம்

### கிழக்கு மாகாண சிறி. இராணுவத்தளபதி தெரிவிப்பு

அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் யோகா ஆகியோர் கொலை செய்யப்பட்டபின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர். அவ்வாறான முயற்சிகள் தொடருமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்க முடியாத நிலை ஏற்படுமென கிழக்கு மாகாண இராணுவத் தளபதி வஜிரவிஜய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவர் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினருக்கும் இது தொடர்பாகத் தகவல் அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த சனிக்கிழமை அன்றும், நேற்றும் வாழைச்சேனைப் பகுதியில் உள்ள மாங்கேணி கஷுவத்தைப் பிரதேசத்திற்கும் உட்பட்ட இடத்தில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும், இது போன்றதாக்குதல்கள் தொடருமானால் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் இருந்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகளை அனுமதிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

## மட்டு. காயாங்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் மீது துப்பாக்கிச் சூடு - சிப்பாய் ஒருவர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு காயாங்கேணிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். நேற்று நண்பகல் நடந்த இத்தாக்குதல் வழமைபோல் வீதிக்கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை இத்துப்பாக்கித் தாக்குதலை நடத்தியவர்கள் இனம் காணப்படவில்லையென சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் சுமிந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மேற்படி காயாங்கேணிப் பிரதேசத்தில் ஒரு வார காலத்திற்குள் நடந்த மூன்றாவது தாக்குதல் சம்பவம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## காணாமற் போன மீனவர்கள் நேற்றுக் கரை சேர்ந்தனர்

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையில் இருந்து கடந்த சனிக்கிழமை மீன்பிடிக்கச்சென்று காணாமற் போன மீனவர்கள் நேற்று வந்து கரைசேர்ந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த சனிக்கிழமை அன்று அம்பலவன் பொக்கணையில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த 20 வயதுடைய பாலசிங்கன் றதீபன் என்பவரும், அதே இடத்தைச் சேர்ந்த 29 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம்பிள்ளை சிவநேசன் என்பவருமே மீன்பிடித் தொழிலை முடித்துக் கொண்டு கரைநோக்கி செல்ல எத்தனித்த போது படகின் வெளியிணைப்பு இயந்திரம் இயங்காமற் போனமையால் இவர்கள் அப்பகுதியில் தத்தளித்துக்கொண்டிருந்த போது அந்தப் பகுதியால் சென்ற யாழ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய பொங்கு தமிழ் நிகழ்வை செப்.25இல் நடத்தத் தீர்மானம்

கனேடிய தமிழ் மாணவர் ஒன்றியம் முன்னின்று நடத்தும் பொங்கு தமிழ் நிகழ்வை அடுத்த மாதம் 25ஆம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு ரொரான்ரோ தமிழ்ச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அனைத்துப் பல்கலைக்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும், ஊடகங்கள் சார்பில் முழக்கம், நம்நாடு, தமிழ்தென்றல், சௌத் ஏசியன், உலகத் தமிழர் கனேடிய தமிழ் வானொலி, தமிழ்ச்சோலை வானொலி, பாரதி, பட்டேல் வீடியோ போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.இதில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தனர்.

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## லெப். கேணல் என அறிவிப்பு

மட்டக்களப்பு மாங்கேணியில் வீரச்சாவடைந்த தயாசீலன்/பாவா, யோகா ஆகியோரின் தரநிலை லெப். கேணல் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் கடந்த 20 ஆம் திகதி தேச விரோதிகளின் தாக்குதலில் வீரச்சா வடைந்தமை தெரிந்ததே.

## ராணுவத்திற்கு தகவல் வழங்குபவர் கொழும்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

இராணுவத்திற்கு தகவல் வழங்கி வந்தவரும் வெள்ளவத்தை ஈ.எஸ்.பி.கூரே மாவத்தையில் உள்ள ஆச்சிரமொன்றில் காவலாளி ஆக இருந்த வருமான யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 9.45 மணியளவில் நடந்த இச்சம்பவத்தின் போது வட்டுககோட்டையைச் சேர்ந்த சுப்பையா குகானந்தன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் சிறிலங்கா இராணுவத்தினருக்கு தகவல்களை வழங்கி வந்ததாகவும் பின்னர் இராணுவத்தினருடன் ஏற்பட்டப்பிரச்சினையினால் வெளியேறி இங்கு காவலாளியாகக்கடமை ஆற்றிவந்ததாகவும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக பொலிசாரும், இராணுவத்தினரும் விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (32)

## வரிவிளம்பரம்

### உடன்தேவை

ஏ-9 வீதியில் (டிப்போச் சந்திக்கும், கந்தசாமி கோவிலுக்கும்) இடையில் கிணற்றுடன் கூடியதும், கட்டடங்களுடனும் அமையக்கூடிய வாடகைக்கு கடை இருத்தல் விரும்பப்படுகின்றது. உடன் தொடர்பு கொள்ளவும். இ.சுதா 65,புகையிரதவீதி, கிளிநொச்சி. (4983)

# இருதய நோய்களுக்கான மருத்துவ நிபுணர் சிகிச்சை

அமெரிக்காவிலிருந்து வருகைதரவிருக்கும் இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சண்சுந்தர் அவர்களிடம் சிகிச்சையளிக்க தேர்வு செய்யும் பொருட்டு வைத்திய கலாநிதி சி.சிவபாலன் அவர்களால் பின் வரும் தியாகதீபம் திலீபன் மருத்துவ மனைகளில் விசேட பரிசோதனை நவீன இலத்திரனியல் சாதனங்கள் (எக்கோ காடியோ கிராம்,ஈ.சீ.ஜீ) மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. இன்று- பூநகரி-காலை 9.00மணி-1.00 மணிவரை.

நாளை-புளியங்குளம்-காலை 9.00மணி-1.00 மணிவரை, நயினைமடு-பி.ப 2.00 மணி-4.00 மணிவரை, 26ஆம் திகதி வியாழக்கிழமை மாங்குளம் காலை 9.00 மணி-1.00 மணி வரை, ஐயன்கன்குளம் பி.ப. 2.00மணி-4.00 மணிவரை, 28ஆம் திகதி சனிக்கிழமை -அளம்பில்- காலை 9.00 மணி-4.00 மணிவரை.

மேலும் தேர்வு செய்யப்படும் நோயாளிகளை இருதயசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சண்சுந்தர் டாக்டர் பொன்னம்பலம் மருத்துவ மனைகளில் பார்வையிடுவார்.

அதன்விபரம்:-வரும் 30,31,01 ஆகிய திகதிகளில் காலை 8.00-2.00 வரை- புதுக்குடியிருப்பு டாக். பொன்னம்பலம் மருத்துவமனை. வரும் 02,03 ஆகிய திகதிகளில் காலை 8.00-பி.ப 2.00வரை- கிளிநொச்சி டாக்.பொன்னம்பலம் மருத்துவமனை.

# 'நியாப்' திட்டச் செயற்பாடுகளை பார்வையிட உலக வங்கிக்குழு வருகை

'நியாப்' திட்டத்தினரால் 2003 ஆம் ஆண்டுத்திட்டத்தின் மூலம் புனரமைக்கப்பட்ட இலக்கு கிராமங்கள், குளங்கள் என்பனவற்றை பார்வையிட இன்று உலக வங்கிப் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர். 2003 ஆம் ஆண்டு செயற்பாட்டில் புனரமைக்கப்பட்ட குளங்களான பிரமந்தன் குளம், ஊரியான் குளம், உழவனூர் கறுக்காய்க் குளம் என்பவற்றோடு அதனடிப்படையில் புனரமைக்கப்பட்ட கிராம வேலைத் திட்டங்களாக வீதி புனரமைப்பு, பொதுக்கிணறு, பொது மண்டபம் என்பனவற்றைப் பார்வையிடுவதற்காக இன்று கிளிநொச்சி வருகை தரும் உலக வங்கியினர் இதே திட்டத்தில் புனரமைக்கப்பட்ட ஏனைய பகுதிகளையும் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச,தீ)

# தவறவிடப்பட்டது

போக்குவரத்துக்கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பகுதிக்கு உரிய 01-100, 147-150, 640-650, 840-850, 952-1000,1201-1350, 1951-2000, 2801-2850 ஆகிய தொடர் இலக்க பற்றுச்சீட்டுக்கள் தவறவிடப்பட்டுள்ளது.

இவற்றைக் கண்டெடுத்தவர்கள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
போ.க.பிரிவு.

(4989)

# வீரவணக்கம்



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 30 | 20 |
| - | - |
| 10 | 08 |
| - | - |
| 1975 | 2004 |

**தமிழீழ தேசியத்துணைப்படைவீரர்**

**கிரிஸ்துராசா**

**பிலிப்பையா கிரிஸ்துராசா**

(கள்ளப்பாடு முல்லைத்தீவு)

20.08.2004 அன்று ஒட்டுசுட்டான் பகுதியில் நீரில் மூழ்கிச் சாவடைந்தார். இம்மாவீரரின் வித்துடல் 21.08.2004 அன்று மாலை 6.50 மணியளவில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. இம்மாவீரருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(4990)

### கிளி.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்

# சூரிய மின்கலம் பெற்றுக்கொள்ளல்

சி.க.கூ.சங்கங்களின் சமாசத்தினால் இதுவரைகாலமும் வன்னிப் பெருநிலப் பரப்பெங்கும் சூரிய மின்கலத்தொகுதியை வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப 10,000/= மானியக்கழிவுடன் வழங்கி வந்தது அனைவரும் அறிந்ததே. தற்போது உலக வங்கி இத்திட்டத்தை 31.09.2004ஆம் திகதியுடன் ரூபா 7500 ஆகக் குறைத்து 01.10.2004ஆம் திகதியுடன் இம் மானியத்தை முற்றாக நிறுத்தவுள்ளதால் தங்களுக்குத் தேவையான சூரிய மின்கலம் ஒன்றை விரைவாகப் பெற்றுக்கொள்ளவும்.

கிளி.மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்,
பிரதானவீதி,
கிளிநொச்சி.

(சி-10201)

## கலந்துரையாடல்

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் திணைக்களங்களினதும், கமக்கார அமைப்புக்களினதும் உதவியுடன் நடாத்தப்படும் விவசாயக்கண்காட்சி சம்பந்தமான கலந்துரையாடல் இன்று காலை 10.00 மணிக்கு கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் சகல திணைக்களத் தலைவர்களையும், கமக்காரர் அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு கிளி. மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

## கணினி வகுப்புக்கள்

விசேட ஆங்கில, சிங்கள, கணினி வேக தட்டெழுத்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பாடசாலை மாணவர்களுக்கு கணினிப்பாட நெறி மாதாந்தம் 500/=

தொடர்பிற்கு
"டேற்றாபேசிக்",
இரணைமடுச்சந்தி,
(ராங்வியூ கோட்டல் அருகாமை)
கிளிநொச்சி. (4989)

# வீரவணக்கம்

### 03 ஆம் ஆண்டு நினைவலைகளில்




| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 15 | 23 |
| * | * |
| 03 | 08 |
| * | * |
| 1980 | 2001 |

தமிழீழ தேசிய துணைப்படை வீரர்

**ச.காந்தரூபன்**

சபாரெத்தினம் காந்தரூபன்
நி.மு. ஊற்றங்கரைவற்றுறை
த.மு. தண்ணீரூற்று
முள்ளியவளை

23.08.2001 அன்று மணலாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்துள்ளார்.



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 27 | 23 |
| * | * |
| 01 | 08 |
| * | * |
| 1974 | 2001 |

தமிழீழ தேசிய துணைப்படை வீரர்

**த.ரமேஸ்**

தங்கவேல் ரமேஸ்
நி.மு. பேராலை பனை
த.மு. நீராவிப்பிட்டி தண்ணீரூற்று
முள்ளியவளை

23.08.2001 அன்று சிலோன் தியேட்டர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்துள்ளார்.

இம் மாவீரர்களுக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்"

(4990)

### கிளிநொச்சி அரச அதிபர் பணிமனை கிளிநொச்சி மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன்

## கிளிநொச்சி அழகியற் கலாமன்றம் நடாத்தும்

# மாபெரும் ஓவியப்போட்டி -2004

★ மாணவர்களுக்கான போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்கள் பங்குகொள்ளலாம்.

★ திறந்த போட்டியில் மாணவர்கள் அல்லாத கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தோர் பங்குகொள்ளலாம்.

*மாணவர்களுக்கான போட்டிப்பிரிவு*

1 ஆம் பிரிவு - தரம் - 5 தொடக்கம் தரம் - 7 வரை
2 ஆம் பிரிவு - தரம் - 8 தொடக்கம் தரம் - 10 வரை
3 ஆம் பிரிவு - தரம் - 11 தொடக்கம் தரம் -13 வரை

*ஒவ்வொரு போட்டிப் பிரிவுக்கும்*

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஆம் இடம் | - | ரூபா | - | 2500 |
| 2 ஆம் இடம் | - | ரூபா | - | 2000 |
| 3 ஆம் இடம் | - | ரூபா | - | 1500 |

பணப்பரிசிலும். சான்றிதழும் வழங்கப்படும்.

ஓவியங்கள் மாணவரது ஆக்கமாயின் அதிபர்களும், மாணவர் அல்லாதோருக்கு கிராம சேவையாளரும் உறுதிப்படுத்த வேண்டும். ஓவியரின் பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்பட்டு தனியாக இணைக்கப்படல் வேண்டும். வரைதலுக்கான வர்ணக்கலவை (ஊடகம்) எதனையும் பயன்படுத்தலாம்.

அளவு 30செ.மீ x 40 செ.மீ (A4தாள்)

*தலைப்பு*

| | |
|---|---|
| பிரிவு1 - | "விடியும் வேளையில்...." |
| பிரிவு2 - | "மனிதனால் மாறும் சூழல்" |
| பிரிவு 3 - | "இடம்பெயர்வும் அவலவாழ்வும்" |
| திறந்தபோட்டி | "இயந்திரமாகும் மனிதவாழ்வு" |

★ தெரிவான சிறந்த ஓவியங்கள் பரிசளிப்பு நிகழ்வின்போது காட்சிக்கு வைக்கப்படும்.

★ ஓவியங்களை 20.09.2004இற்கு முன்னர் செயலாளர் /அதிபர் அழகியற் கலாமன்றம் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அலுவலக நேரத்தில் நேரடியாகவோ ஒப்படைக்கலாம்.

குறிப்பு:-

மேற்படி நிகழ்வுகளுடன் இணைந்து மாபெரும் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடாத்தவுள்ளோம். ஓவிய நண்பர்கள் தங்களிடமுள்ள ஓவியங்களை அனுப்பிவைத்து தாங்களும் இக்கண்காட்சியில் இணைந்து கொள்ளுங்கள்.

*செயலாளர்,
அழகியற்கலாமன்றம்
கிளிநொச்சி.*

(சி-9800)

# 37000 செச்னிய மக்கள் ஒரு வருடத்தில்

# மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம்

(மொஸ்கோ)

**செச்னிய பிரஜைகள் அடங்கிய 37 ஆயிரம் ரஷ்ய மக்கள் கடந்த ஒரு வருட காலத்தில் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இவர்கள் அனைவரும் பொருளாதாரக் காரணங்களின் அடிப்படையிலேயே நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள் என்ற ரஷ்ய அதிகாரிகளின் கூற்றை செச்னிய மக்கள் நிராகரித்துள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, செச்னியாவில் தங்கியிருப்பதில் தங்களுக்கு ஏற்படும் அச்சம் என்பன காரணமாகவே தாங்கள் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். தினமும் அங்கு இடம்பெறும் மோதல்களில் கிளர்ச்சி வாதிகள், பொலிசார், இராணுவத்தினர், பொது மக்கள் ஆகியோர் என அதிக எண்ணிக்கையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் முன்னால் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள பங்களாதேஷ் கமாண்டோப் பிரிவினர்.

## எண்ணெய் விலை வீழ்ச்சி கண்டது

(பாக்தாத்)

ஈராக்கின் நஜாப் நகரில் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்று வரும் மோதல்களின் காரணமாக மசகு எண்ணெய்யின் விலை உலக சந்தையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பீப்பா ஒன்றிற்கு 50 டொலர்களாக அதிகரித்திருந்த போதிலும் நேற்றுக்காலை மசகு எண்ணெய்யின் விலை 46.87 டொலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளது. பீப்பா ஒன்று 50 டொலர்கள் என்ற விலை கடந்த 21 வருட காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆகக் கூடிய விலையாகும்.





ஈராக்கில் மொசுல்நகரில் அமெரிக்க வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சு சம்பவம் நிகழ்ந்த இடத்தை மக்கள் அவதானிப்பதையும், காயமடைந்த இந்தோனேசிய பிரஜையை பொலிசார் பாதுகாப்பதையும் காணலாம்.

# வங்காளதேசத்தில் அழியும் நிலையில் 500 இந்துக் கோவில்கள்

(டாக்கா)

வங்காளதேசத்தில் அழியும் நிலையில் 500 இந்துக் கோவில்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவற்றில் 300 கோவில்களை பாபு அகமது என்ற முஸ்லிம் படப்பிடிப்பாளர் படம் எடுத்திருக்கிறார். அவற்றில் இருந்து 100 கோவில்களின் படங்களை வைத்து ஒரு போட்டோக் கண்காட்சியை நடத்தி வருகின்றார். டாக்காவில் நடக்கும் இந்தக் கண்காட்சியில் 16 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் கட்டப்பட்ட கோவில்களின் படங்கள் இடம் பெற்றுள்ளன. இந்தக் கோவில்கள் முஸ்லிம் மன்னர் ஆட்சியில் கட்டப்பட்டவை என்று கூறிய அவர் பல முஸ்லிம் மன்னர்கள் இந்தக் கோவில்களுக்கு நிதியுதவி அளித்தனர் என்றும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் “இந்தக் கோவில்கள் நம் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும் எனவே அவற்றைப் பாதுகாக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

ஐ.நா.சபையின் கல்வி,சமூக, பண்பாட்டமைப்பின் (யுனெஸ்கோ) டாக்கா பிரதிநிதி உள்காங் வோல்மன் கூறுகையில் அகமதுவின் 50 புகைப்படங்களைக் கொண்ட ஒரு புத்தகத்தை யுனெஸ்கோ வெளியிடும் என்று கூறினார்.

# மாவோயிஸ்ட்டுக்களின் முயற்சியை முறியடித்தது நேபாள இராணுவம்

(காட்மாண்ட்)

நேபாள நாட்டில் ஜீம்லா மாவட்டத் தலைமையகத்தை ஆயிரம் மாவோயிஸ்டுகள் கைப்பற்ற நடந்த முயற்சியை இராணுவம் முறியடித்துள்ளது. அப்போது நடந்த சண்டை 6 மணி நேரம் நீடித்தது. இதில் 4 தீவிரவாதிகளும், இராணுவ வீரர் ஒருவரும் பலியானார்கள். இரவு 11.00 மணிக்கு சண்டை நிறைவடைந்ததாகவும் இதன்போது 6 பொலிஸ்காரர்களை மாவோயிஸ்ட்டு கம்யூனிஸ்டுகள் கடத்திச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலில் நிலவருவாய்த்துறை, வேளாண்மை வளர்ச்சித் துறை ஆகியவற்றின் அலுவலகங்கள் சேதமடைந்தன.

# 6000 தேள்களுடன் 36 நாள் வாசம்

# உலக சாதனைக்கு மலேசியப் பெண் மீண்டும் முயற்சி

(கோலாலம்பூர்)

மலேசியாவைச் சேர்ந்த நூர் மலீனா ஹசன் (27) 6000 தேள்கள் நிரப்பிய கண்ணாடி அறையில் தொடர்ந்து 36 நாள் தங்கி இருந்து உலக சாதனை படைக்கும் முயற்சியை மீண்டும் தொடங்கியுள்ளார்.

இந்தச் சாதனையை குவான்டன் என்ற இடத்தில் சனிக்கிழமை அவர் தொடங்கினார்.

ஸ்வெட்டர் மற்றும் ஜீன்ஸ் பேன்ட் அணிந்துள்ள அந்த பெண்ணின் தலை, முதுகு, கழுத்து, கால்கள் என எங்கும் தேள்கள் ஏறும் புகைப்படம் ஒன்றை பத்திரிகை ஒன்று செய்தியுடன் வெளியிட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் 2700 தேள்கள் நிரம்பிய கண்ணாடி அறைக்குள் தன்னை அடைத்துக்கொண்டு தொடர்ந்து 30 நாள் வாசம் செய்து உலக சாதனை படைத்தவர் ஹசன். இவரது இந்தச் சாதனையை தாய்லாந்தைச் சேர்ந்த காஞ்சனா. கெட்கீவ் என்ற பெண் அடுத்த ஆண்டில் முறியடித்தார். 3400 தேள்கள் நிரம்பிய அறையில் 32 நாள் வாசம் செய்தார் காஞ்சனா இதை முறியடிக்க புதிய சாதனை முயற்சியை ஹசன் மேற்கொண்டுள்ளார். தினசரி ஒருமுறை 15 நிமிடம் வரை மட்டும் அறையை விட்டு வெளியே வருவது எனத் தனக்குள் ஒரு நிபந்தனையை விதித்துக் கொண்டுள்ளார் ஹசன்.

# சீனத் தலைவர் டெங்ஷியோபிங்கின் நூற்றாண்டு விழாச் சிறப்பு அழைப்பு

(பீஜிங்)

சீனாவின் தலைவரான டெங்ஷியோபிங் கம்யூனிஸ்டு பிடியில் இருந்து பொருளாதாரத்தை விடுவித்தவர். பொருளாதார சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து அந்த நாட்டில் வேகமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட வழி வகுத்தவர். அவர் 92 வயதில் 1997 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார். அவர் பிறந்த நூற்றாண்டு விழா நேற்று சீனாவில் கொண்டாடப்பட்டது. இவரது வெண்கலச் சிலையை கம்யூனிஸ்டு கட்சித்தலைவரும், அதிபருமான ஹியூ ஜிண்டாவோ திறந்து வைத்தார் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு டெங்கை பாராட்டிப் பேசினர்.


# 6 பேரைக் கொன்ற பல்கலை மாணவன் தூக்கிலிடப்பட்டுக் கொலை

(பீஜிங்)

சீனாவிலுள்ள பீஜிங் பல்கலைக் கழகத்தில் படித்த மாணவன் லி.யீ. ஜியாங் இவன் இணையத் தளத்தில் ஆபாச இணையத் தளங்களைப் பார்த்துப் பார்த்து அதற்கு அடிமையாகிவிட்டான். அதனால் பல்கலைக்கழகப் படிப்பையும் கைவிட்டான்.

இணையத்தளம் மூலம் நான்கு பேர் பழக்கமானார்கள். அவர்கள் இவனை ஓரின உறவுக்குக் கட்டாயப்படுத்தி உறவு கொண்டிருக்கிறார்கள். இதனால் ஆத்திரமடைந்த அவர்களை ஒவ்வொருவராக அழைத்துக் கொலை செய்தான். மீதி இரண்டு பேரை எதற்காகக் கொன்றான் என்பது தெரியவில்லை.

ஆறு பேரைக் கொன்றதாக அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை அவன் தூக்கில் போடப்பட்டான்.



நஜாப்பில் நடைபெற்ற தாக்குதல் சம்பவமொன்றின் போது அமெரிக்க இராணுவ கவச வண்டி இடிந்த சுவரைக் கடந்து செல்கிறது.

# தனது மோசமான செயற்பாட்டால் அ.இ.அ.தி.மு.க தானாகவே பதவி விலகும்

(சென்னை)

தமிழ் நாட்டில் அ.இ.அ.தி.மு.க அரசை அரசியல் சாசனத்தின் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தி கலைக்க வேண்டிய அவ்சியம் இல்லை என்றும் தனது மோசமான செயற்பாடுகளால் அந்த அரசு தானாகவே பதவியிலிருந்து விலகி விடும் என்றும் தி.மு.க தலைவர் கருணா நிதி கூறியுள்ளார். சேலத்தில் நடை பெற்ற தி.மு.க மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து கூறுகையில் இந்த அரசை அகற்ற தி.மு.க சனநாயக ரீதியில் போராடும் என்றும் தமிழக மக்களும் இந்த அரசை ஆட்சியில் இருந்து அகற்ற தயாராகிவிட்டார்கள் என்றும் கூறினார். சட்டசபையை முடக்கி வைக்க அரசியல் சாசனத்தின் 355 ஆவது பிரிவைப் பயன்படுத்தவேண்டிய அவசியம் இல்லையென்றும் மத்திய அமைச்சரவையில் தமிழ் நாட்டிலிருந்து அதிகளவில் அமைச்சர்கள் இடம்பெற்றிருப்பதால் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.



பிலிப்பைன்ஸ் இராணுவத் தலைமையகத்தில் பிரியாவிடை பெற்றுச் செல்லும் பொலிஸ் உயரதிகாரியுடன் சனாதிபதி அராயோ கைகுலுக்குவதை ஏற்பதையும் காணலாம்.

# பாக்.சனாதிபதி மாளிகையை தகர்க்கச் சதி அல்-கைய்தாவுடன் தொடர்புடைய ஐவர் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் மாளிகை பாராளுமன்றக்கட்டடம், இஸ்லாமாபாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகம் உள்ளிட்ட முக்கிய கட்டடங்களைக் குண்டு வைத்துத் தகர்க்க பயங்கரவாதிகளின் குழுவொன்று சதித்திட்டம் தீட்டியுள்ளது. அவர்கள் அச்சதித்திட்டத்தை நிறைவேற்றுமுன் அவர்களைப் பாகிஸ்தான் பொலிசார் கைது செய்தனர்.

சர்வதேச பயங்கரவாதத் தலைவர் ஒசாமாபில்லேடனின் தலைமையில் செயற்படும் அல்கைய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் அவர்கள் என்று பாகிஸ்தான் செய்தித்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் அகமது சனிக்கிழமை இரவு தெரிவித்தார். அச்சதித் திட்டத்தைத் தீட்டுவதில் முக்கிய பங்காற்றியதாகக் கூறப்படும் எகிப்து நாட்டைச் சேர்ந்த அல்-கைய்தா தீவிரவாதிகள் இருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர். இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு மதரஸாவைச் சேர்ந்த மதகுரு அப்துல் ரஷித் காஜிக்கும் அச்சதியில் தொடர்பு உள்ளது. ஆனால் அவர் தலைமறைவாகிவிட்டார். அவரையும் பொலிசார் தேடி வருகின்றனர் என்று அமைச்சர் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் உலக வங்கி நிதியுதவியுடன் வறிய மக்களுக்கான வீடமைப்புத்திட்டம்

## முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

**உலகவங்கியின் நிதியீட்டத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பெற்றுவரும் வறியமக்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பெற்று வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பெறுகின்றன.**

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 25 வீடுகளும் பளைப் பிரதேச செயலர் பிரிவில் 25 வீடுகளுமாக மொத்தம்





100 வீடுகள் அமைக்கும் வேலைகள் முதற்கட்டமாக ஆரம்பிக்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளும் குறித்த வீடமைப்பு வேலைகளை உலகவங்கியின் நிதியீட்டத்துடன் தாமாகவே முன்னெடுக்கலாம் எனும் பொதுவான திட்டக் கொள்கை இருந்தும்,மிகவும் வறிய நிலையிலும் நலிவுற்று மிருந்த மக்களின் மேலான வேண்டுகைகளுக்கு அமைவாகக்,கரைச்சிப் பிர தேச செயலர் பிரிவில் 22 வீடுகளை யும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 03 வீடுகளையும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பொறுப் பேற்று அமைத்து வருகின்றது.

மக்களின்விருப்பு,துறைசார்ந்தோரின் ஆலோசனை, ஆர்வலர்களின் கருத்துப்பகிர்வு என்பவற்றுடன் கட்டுமானப்பணிகள் விரைவு படுத்தப பெற்றுவருவதாகவும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இத்துரித செயற்பாடுகளுக்காக கிளி/அரசசெயலகத்தின் பூரண ஆதரவும் ஒத்துழைபபும் கிடைத்து வருவதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டச் செயலக செய்திக்குறிப்பொன் றில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.

## வயல் விழா

(மல்லாவி)

யோகபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வளநகர் பிள்ளையார் வாய்க்கால் பகுதியில் மாற்றுப் பயிர்ச் செய்கை வயல் விழா நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் விவசாயப் பணிப்பாளர் இ.கோகிலதாசன் தலைமையில் இடம் பெற்றது.

(24)

# கல்விளானில் விடுதியுடன் சேர்ந்த ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

(முல்லைத்தீவு)

துணுக்காய்ப்பிரதேச செயலர் பிரிவு கல்விளானில் விடுதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா திறந்து வைத்தார்.

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி கே.சயந்தன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வின் மங்கல விளக்கினை மல்லாவி தமிழீழ நிர்வாக சேவையின் நிர்வாக அலுவலர் இரத்தினம், துணுக்காய் மத்தியமருந்தக வைத்தியர் திருமதி குகதாசன், துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் ஜெகநாதன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக்கொடியினை துணுக்காய் வலயப் பொறுப்பாளர் ஈழக்கண்ணன் ஏற்றினார்.

வரவேற்புரையினை மல்லாவி பொதுசுகாதார பரிசோதகர் அரவிந்தன் நிகழ்த்தினார். பெயர்ப் பலகையினை யுனிசெப் பிரதிநிதி சத்தியா திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தினை முல்லை மாவட்ட பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா நாடாவினை வெட்டித்திறந்து வைத்ததோடு சிறப்புக் கருத்துரையினையும் நிகழ்த்தினார். சின்னமுத்து ருபேலா நோய்க்கான தடுப்பு மருந்து வழங்குவது தொடர்பாக மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரிப் பணி மனைப் பணியாளர் சுகந்தன் கருத்துரை வழங்கினார்.

இந்தநிகழ்வில் கல்விளான் கிராம மக்கள், பயனாளிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், வைத்திசாலைப் பணியாளர்கள், துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள், பொது முகாமையாளர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(20,24)

# பொது மலசல கூடங்களை பராமரிப்பதில் சிரமம்!

வவுனியா நகர்ப் பகுதியில் பாரியளவு தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக நகர்ப்பகுதியில் உள்ள பொது மலசல கூடங்களைப் பராமரிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டிருப்பதாக வவுனியா நகரசபைச் செயலாளர் செல்வராஜா தெரிவிக்கின்றார்.

ஆயினும், நகர்ப்பகுதியில் உள்ள பொது மலசல் கூடங்களை மக்கள் பாவனை செய்ய வேண்டாம் என்று கூறமுடியாத நிலை இருப்பதாகவும், வெளியிடத்திலிருந்து தற்போது தண்ணீர் கொண்டு வரப்படுவதாகவும், நகரில் உள்ள தண்ணீர்த் தாங்கியில் நீர் மட்டம் குறைவாக இருப்பதால் சேமிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(21)

# கைகொடி சவாரிப்போட்டியில் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராமத்தில் பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசத்திற்கான கைகொடி மாட்டு சவாரிப்போட்டி பாண்டியன்குளம் தேசியஎழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் கரும்புள்ளியான் இருதயநாதர் ஆலயமுன்றலில் கடந்த சனிக் கிழமை பி.ப 2.30 மணிக்கு கரும்புள்ளியான் ஊரகதேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை கோட்டத்தேசிய எழுச்சிப்பேரவை பொருளாளர் கா.சுப்பிரமணியம் ஏற்றிவைக்க, தமிழீழதேசியக் கொடியை பாண்டியன்குளம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வேங்கைமாறன் ஏற்றிவைத்தார்.அகவணக்கத்துடன் நிகழ்வுகள் கோட்டத்தேசிய எழுச்சிப்பேரவை பொருளாளரால் ஆரம்பித்துவைக்கப்பட்டன. நிகழ்வில் கருத்துரைகளை கரும்புள்ளியான் கிராம சேவையாளர் சு.நவரத்தினம், பிரதேசபொறுப்பாளர் வேங்கை மாறன் ஆகியோர் வழங்கினர்.

இறுதியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கைகொடி மாட்டுச்சவாரியின் 'சி'பிரிவில் பிரசாந்,கரும்புள்ளியான், 1 ஆம் இடத்தையும்; மிதுசன், மல்லாவி 2 ஆம் இடத்தையும், செந்தூரன், செல்வபுரம், 3ஆம் இடத்தையும்; 'பி' பிரிவில் சபேசன், மல்லாவி, 1ஆம் இடத்தையும்; சதீஸ், கொம்பறுத்தகுளம், 2ஆம் இடத்தையும்; சுதன் கரும்புள்ளியான், 3 ஆம் இடத்தையும்;'ஏ'.பிரிவில் மகிந்தன், கரும்புள்ளியான், 1 ஆம இடத்தையும், ராக மோகன், 2 ஆம் இடத்தையும்; மோகன், பாலையடி 3 ஆம் இடத்தையும்; பெற்றுக்கொண்டனர்.

இந் நிகழ்வில் பாண்டியன்குளம் தேசியஎழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், பொதுமக்கள், போராளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(24)

# முள்ளியவளைப் பிரதேசத்தில் "வீரமுரசு" மாத கலை நிகழ்வு

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் "வீரமுரசு" மாத கலை நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது.

மேற்படி வீரமுரசு கலைநிகழ்வு குமுளமுனை வல்ய அரசியல் துறைப்பொறுப்பாளர் ஒளிச்செல்வனின் ஒழுங்குபடுத்தலில் அப்பிரதேச மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் வெள்ளியன்று இரவு 7.30 மணிக்கு அப்பகுதி கிராமஅலுவலர் தெய்வேந்திரம் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை முல்லை மாவட்ட தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைத்ததையடுத்து, அகவணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து நிகழ்வின் தலைவரின் தலைமையுரை இடம்பெற்றது.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலில் குமுளமுனை மாவீரர் முன்பள்ளிச் சிறார்களின் இசையும், அசைவும் நிகழ்வு இடம்பெற்றது. அதனையடுத்து நா.பார்த்தீபனின் நெறிப்படுத்தலில் பாடுவோர் பாடலாம் எனும் நிகழ்வு இடம்பெற்றது.


(ஆ)

# தரித்து நின்ற வாகனத்துடன் மோதி உந்துருளிச் சாரதி படுகாயம்

(முல்லை)

சிலாவத்தை கடற்கரை வீதியில் கடந்த வெள்ளியன்று மோட்டார் சைக்கிளில் சென்றவர் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீதி திருத்தப் பயன்படும் மோட்டகிரைடர் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார்.யோசேப்-ஜேசுரட்ணம் என்று அழைக்கப்படும் மேற்படி நபர் மோட்டார் சைக்கிளில் கடற்கரை நோக்கிப் பயணித்த வேளையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.இவர் உடனடியாக முல்லை மாவட்ட கட்டம் I வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

(20)



நெடுங்கேணியிலிருந்து கனகராயுன் குளச்சந்திக்குச் செல்லும் பிரதான வீதியில் கரப்புக்குத்திக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள நீர் அகற்றும் "கோஸ்வே" நீண்டகாலமாக கவனிப்பற்ற நிலையில் உள்ளது.

இது மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக் கோஸ்வே சேதமடைந்திருப்பதால் மழைகாலங்களில் அவ்வீதியில் பயணம் தடைப்பட்டு விடும். அத்தோடு ஏனைய காலங்களில் அந்த வீதியில் பயணிப்பவர்கள் சிறிய பகுதிக்கூடாக சேதமடைந்து காணப் படும் ஆபத்தான வழியிலேயே பயணித்து வருகின்றனர்.(சோ.கு)

# மிதிவெடிகள் அகற்றும் பணி தாமதம் மக்கள் மீள்குடியமர முடியாது அவலம்

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி வடக்கு கிராமசேவையாளர் பிரிவில் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என பிரதேச செயலர் கவலை தெரிவித்தார்.

மேற்படி கிராமசேவையாளர் பிரிவில் 14 பேரின் காணிக்குள் மிதிவெடிகள் அகற்றப்படாது உள்ளதால் தமது காணிகளுக்குள் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை உள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இவற்றை அகற்றித் தரும்படி மிதிவெடி அகற்றும் பிரிவினரிடம் பிரதேச செயலர் வேண்டியும் இற்றைவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும்,கனகராயன்குளம் பகுதியிலும் மிதிவெடிப் பிரதேசங்களைத் தெரிவுசெய்துள்ள போதும் அவற்றையும் அகற்றவில்லை என்றும் பிரதேசசெயலர் கவலை தெரிவித்துள்ளார்.(சோ,கு)

# தியாகதீபம் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

## -தேசிய எழுச்சிப் பேரவை நடவடிக்கை

(தென்மராட்சி)

**தியாகதீபம் லெப்.கேணல் திலீபன் அவர்களுடைய 17ஆம் ஆண்டு நினைவு தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை முடிவு செய்துள்ளது.**

இதன்படி ஊரகக்கிளை, உறுப்பினர்களையும், பொது நிறுவனங்களையும், அமைப்புக்களையும் ஊரக ரீதியாகச் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதென்றும் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள வீதிகள், வீடுகள், பொது இடங்கள், வைத்தியசாலை வளாகங்கள் போன்றவற்றில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதுடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச,அரசசார்பற்ற கல்வி, கூட்டுறவு, பொதுநிறுவனங்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்களில் தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம்வைத்து ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து திலீபன் பற்றிய சிறப்புரைகளை செப்ரெம்பர் பதினைந்து முதல் ஒழுங்கமைத்தல் என்பன அடங்கும்.

மேலும், பிறக்கும் குழந்தைகளுக்கு தூயதமிழில் பெயர் சூட்டிட ஊக்கப்படுத்தல் தியாகதீபம் திலீபன் பெயரால் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத்தூபிகள், மண்டபங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், புதுப்பொலிவுடன் புனரமைத்தல், பதாகைகள், விளம்பரங்கள், ஊடகங்கள், செய்தித்தாள்கள் மூலம் இத் தியாகியின் வரலாற்று நிகழ்வுகளைச் சித்திரித்தல் போன்ற வற்றை முழு அளவில் மேற்கொள்ள யாழ். குடாநாட்டு தேசியஎழுச்சிப் பேரவை முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. (28)

### திருத்த வேண்டுகை

சாவகச்சேரி மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள வீதியின் மதகு முற்றாகச் சேதமடைந்துள்ளதால் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு அது பெரும் இடையூறாக உள்ளது.இது பெருந்தெருக்கள் திணைக் களத்திற்கு உட்பட்டது எனத் தெரிய வருகிறது. (28)

# தேசிய எழுச்சிப் பேரவை கிளைகள் புனரமைப்பு

(தென்மராட்சி)

கொடிகாமம் தேசிய எழுச்சிப் பேரவையில் தாவாளை, இயற்றாலை,கிளைகள் புனரமைக்கப்பட்டு இப்பகுதியைச் சேர்ந்த 350 இற்கும் அதிகமான உறுப்பினர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தாவாளை,இயற்றாலை அமெரிக்கன் மிசன் பாடசாலையில் கொடிகாமம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் மருத்துவர் இ.கந்தையா தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் மற்றும் கொடிகாமப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ரத்தினம், தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவையின் இணைப்பாளர் கந்தசாமி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (28)

# எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப அனைத்து மக்களின் பங்களிப்பும் அவசியம்

## - பிரதேச சபைச்செயலர் அழைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் 60 கிராமஅலுவலர் பிரிவில்உள்ள 500க்கும் மேற்பட்ட வீதிகளைப் புனரமைக்க பல மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகின்றது என சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்தார்.

உலக உணவுத் திட்டத்தின் கீழும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் அரசாங்கம் ஒதுக்கீடுசெய்யும் நிதியில் இருந்தும் இத்திட்டங்களை முழு அளவில் முன்னெடுப்பது பெரும் கஸ்ரமான விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே சிறிலங்காப் படைகளின் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தை முழு அளவில் கட்டியெழுப்ப வேண்டும் எனில் அனைத்து மக்களினதும் பங்களிப்பு முழு அளவில் ஒருங்கிணைக்கப்படவேண்டும். அதற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் பாரிய ஒத்துழைப்பும் அவசியம் வேண்டும் என்றார்.

வாழ்வுரிமை இழந்து வாழும் எமது மக்களுக்கு தேசியஎழுச்சிப் பேரவை ஒரு கவசம் என்றார். வரும் ஆண்டளவில் அதிகளவு நிதிகளைஅரசிடம் கோரஇருப்பதாகவும் கடந்த தடவைகள் நிதி ஒதுக்கீடுகள் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்ட தென்மராட்சிப்பகுதிக்கு அதிகம் கோரியிருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவு நிதியே எமது திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றும் அவர்தெரிவித்தார் .(28)

## - தென்மராட்சிப் பகுதியில் -

# படையினர் ஆக்கிரமிப்பை அகற்ற நீதிமன்றம் செல்ல மக்கள் முழவு

(தென்மராட்சி)

சிறிலங்காப்படையினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் குடியிருப்புக்களை ஆக்கிரமித்துள்ளமையால் அங்கிருந்து படையினரை வெளியேற்ற மக்கள் நீதிமன்றம் செல்ல முடிவு செய்துள்ளனர்.தனங்கிளப்பு, மறவன் புலோ, கைதடி, நாவற்குழி பகுதிகளில் உள்ள மக்களே தங்கள் வீடுகளை ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள படைகளை வெளியேற்றிட பல போராட்டங்களை முன்னெடுத்தும் எந்தப் பலனும் கிட்டாததால் மீண்டும் நீதிகோரி நியாயமானதங்களது உரிமைகளுக்காக நீதிமன்றம் செல்லமுடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இதற்கான ஆயத்தப் பணிகளை பாரதி சனசமூக நிலையமும் மற்றும் இப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும்மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. படையினர் தொடர்ந்தும் இப்பகுதிகளை ஆக்கிரமித்து நிலை கொண்டிருப்பதால் இங் கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகவாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். (28)

# சரஸ்வதி அ.த.க.பாடசாலை மீள இயங்க வைக்க வேண்டுகை

(தென்மராட்சி)

தென்மராட்சி கெருடாவில் பகுதியில் அமைந்துள்ள சரஸ்வதி அரசினர்தமிழ்க்கலவன் பாடசாலையை மீள இயங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2000ஆம் ஆண்டு இடப் பெயர்வின் போது முற்றாக அழிக்கப்பட்டு இதுவரை காலமும் மீள இயக்கப் படாமல் உள்ள சரஸ்வதி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை மீண்டும் அதே இடத்தில் இயக்க பல்வேறு தரப்புக்களுக்கும் இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

பற்றைகளால் சூழப்பட்டு புதர் மண்டிக்கிடக்கும் இப் பாடசாலையை மீண்டும் இயக்கி இப் பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும்எனவும் தென்மராட்சி வலயக்கல்விஅலுவலகம் அதற்கான நடவடிக்கைகளைஉடனே மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# அனுமதியின்றித் தறிக்கப்பட்ட 60 பனைமரங்கள் பறிமுதல்

(தென்மராட்சி)

தென்மராட்சி கெற்பெலிக்கும் பாலாவிக்கும் இடையில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி ஒன்றில் இருந்து தறிக்கப்பட்ட 60பனைமரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எந்தவித அனுமதியுமின்றி தறிக்கப்பட்ட இந்தப் பனைமரங்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் கைப் பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)

# வரட்சியால் பாதிப்புற்றோருக்கு உதவ பா.உறுப்பினர்கள் இணக்கம்

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது மாதச் சம்பளத்தின் அரைவாசியை அன்பளிப்பாக வழங்குவதற்கு இணங்கியுள்ளனர்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒத்திவைப்புத் தீர்மானம் மீதான விவாதம் ஒன்றின் போது ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் கொற்றப்பொல அமரகித்திதேரர் இதற்கான முன்மொழிவை வழங்க அமைச்சர் மகிந்த சமரவீர அதை ஆமோதித்தார்.

இத் தீர்மானம் பற்றி கட்சித் தலைவர்களுக்குத் தான் அறிவிப்பதாகச் சபாநாயகர் கூறியுள்ளார்.

# அரசின் யோசனைகளுக்கும் நாம் ஆதரவு அளிக்கோம்

## - ஜே.வி.பி யின் லால்காந்த

சமஷ்டி இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசாங்கம் புதிதாகத் தயாரித்திருக்கும் புதிய யோசனைகளுக்கு எமது கட்சி ஆதரவு வழங்காது என கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.இப்போது நாட்டிற்கு புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலசபை தேவைப்படாது எனவும், நாட்டில் தேசியப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காண்பது மிக அவசியம் எனவும் லால்காந்த மேலும் தெரிவித்துள்ளார்.

## - தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவாக -

# கனடாவில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு சிறப்புடன் நடத்த மாணவர் அமைப்புக்கள் ஏற்பாடு

கனடா நாட்டில் பொங்குதமிழ் நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற மாணவர் அமைப்புக்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கனடா தமிழ் மாணவர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெற்றது போன்றே கனேடியத் தமிழர்களின் இருப்பை அடையாளப்படுத்தவும், தாயகத் தமிழர்களுடனான தமது உறவுப் பேணலை வெளிப்படுத்தவும் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விழா ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தவகையில் கனேடியக் குடியுரிமை பெற்று தேசிய நீரோட்டத்தில் இணைந்துள்ள இதர இனங்களில் ஸ்பானிச மொழி பேசுபவர்கள் தங்களை ஸ்பானிஸ் கனேடியர் என்றும், சீன மொழி பேசுபவர்கள் தங்களை சீனக் கனேடியர்கள் என்றும், கிரேக்க மொழி பேசுபவர்கள் கிரேக்கக் கனேடியர்கள் என்றும் ஒவ்வொரு இனங்களையும் தங்களது மொழி அடையாளங்களை வைத்தே அடையாளப்படுத்தி அழைப்பார்கள். இவ்வாறு தம்மை அடையாளப்படுத்தியுள்ள மேற்படி இனங்கள் தங்கள் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைத் தொடர்ந்து பேணுவதுடன், பல பிரதேசங்களில் ஒரு குழுமமாக வாழ்ந்து வருவதும் தங்களுக்கான அங்காடிகள், கலாசார மையங்களை உருவாக்கிப் பேணுவதோடு, கனேடியத் தேசிய நீரோட்டத்தின் பிரிக்க முடியாத அங்கமாக இருந்து வருவதோடு தமது தாயகத்துடனான தொடர்புகளை இறுக்கமாகப் பேணியும் வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது சுமார் 300,000 பேரைக் கொண்ட கனேடியத் தமிழர்கள் தங்களது இருப்பை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்த பொங்குதமிழ் நிகழ்வை சகல தமிழர் அமைப்புக்கள், தமிழ் ஊடகங்கள் ஆகியவற்றின் ஒருமித்த ஆதரவுடன் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு செய்வதன் மூலம் காத்திரமான ஒரு சமுதாயமாக ஒரே தலைமையின் கீழ்த் தம்மைப் பிரகடனப்படுத்துவதுடன், தமக்கும் தாயகத்திற்குமிடையேயான தொடர்பைப் பேணி வலுப்படுத்தி, தற்போது சர்வதேச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளில் காத்திரமான பங்கு வழங்க வேண்டிய கடப்பாடு கனடாவிற்கு உண்டு என்பதைத் தெளிவுபடுத்தவும் இந்நிகழ்வு பெருமளவில் உதவும் என்பதோடு,தமிழர் தேசியம், தமிழர் தலைமை, தமிழர் தாயகம், சுயநிர்ணயம் போன்ற பொங்கு தமிழின் அடிப்படைகளை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.





# வரவு–செலவுத் திட்டம் தயாரிக்க — மக்களின் ஆலோசனையைக் கோருகிறது ம.ஐ.மு



ஒரு நாட்டில் வருடந்தோறும வரவு, செல்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவது அந்நாட்டின் பொருளாதாரத்தை அளக்கும் சிறந்த அளவுகோலாகும்.

வண்டொன்று பூவை சிதைக்காமல் தேனை எடுப்பது போன்று, மக்களை வருத்தாமல் வரிகளை அரசு அறவிடவேண்டுமென்பது இந்தியாவை ஆண்ட சொலமன் அரச வம்சத்தினர் கூறிவைத்த ஒரு கூற்றாகும். அதற்கேற்ப சந்திரிகாவின் அரசும் மக்களை கஷ்ரத்திற்குள்ளாக்காதவாறு வரவிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குமென்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். இதுவரை காலமும் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்க சில வாரங்களுக்கு முன்பாக பொருட்களின் விலை அதிகரித்திருப்பதை நாம் அவதானித்துள்ளோம். இதன் பேறாக அரசு வரவு செலவுத் திட்டத்திற்கமைவாக பொருட்களின் விலை அதிகரிக்கின்றது என்றில்லாமல் மறைமுகமாக விலை அதிகரிப்பைச் செய்து மக்களை சிரமத்திற்குள்ளாக்குகின்றது.

சனநாயக நாட்டில் வாழும் மக்களுக்கு சனநாயக ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலை அண்மைக்காலமாக காணக்கூடியதாகவுள்ளது. ஆயினும் தற்போதைய ஐக்கிய முன்னணி அரசு சனநாயகத்தைப் பேணுவதாகக் கூறிகொள்ளும் வகையில் வரவு செலவுத் திட்டத்திற்கு முன்பாக மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்ப திட்டத்தை தயாரிக்க திட்டமிட்டுள்ளமை அறியவருகிறது. இது முதலாவது சந்தர்ப்பமாகும். இப்படி ஒரு திட்டம் இதற்கு முன்பு எந்த அரசினாலும் முன்வைக்கப்படவில்லை. அதனால் இம்முறை வகுக்கப்படும் வரவு செலவுத் திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும்.

வரவு செலவுத் திட்டத்தினால் பாதிக்கப்படுவது வறிய மக்களே!. வரவு செலவுத் திட்டம் தொடர்பாக பொது மக்களின் கருத்தை அறியும் கொள்கை நாட்டிற்கும், மக்களிற்கும் நல்லது. எனினும் அது கொள்கையளவில் மட்டும் கடைப்பிடிக்கப்பட்டால் அதனால் மக்களுக்கு ஏதும் நன்மை கிடைக்காது.

இவ் வருட முற்பகுதியில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த ஐ.ம.சு முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டத்தை ஆய்வு செய்தல் சிறந்ததாகும்.

மக்களின் கருத்து எவ்வாறு இருக்குமென்பதை அறிய பின்வரும் விடயங்களை முன்வைத்துள்ளது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பதனால் அரசுக்கு ஏற்படும் தாக்கம், தேசிய கைத்தொழில் தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தில் எடுக்க வேண்டிய தீர்மானம், கிராமிய அபிவிருத்தி தொடர்பான யோசனைகள், நாட்டுக்கு பொருத்தமான வரிக்கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தல், வழங்கல் அளிக்கப் படுவதைத் தடுக்கும் வழிகள் என்பவையே அவையாகும்.

வரும் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்பு வரவு செலவுத் திட்டம் தொடர்பாக மக்கள் கருத்து அறியப்படும். இதற்கு பாராளுமன்றக் குழு அமைக்கப்படவிருக்கிறது. குழுவில் பின்வருவோர் அங்கம் வகிப்பர். விமல்வீரவன்ச, விஜயதாசராஜபக்ஷ, நந்தணகுணதிலக்க, மகிந்தானந்தஅலுக்கமகே, சிறீபதி, சூரியாராட்சி, சுனில் ஹந்துன்னத்தி ஆகியோர்.

ஒரு முறை ரொனிடிமெல் தயாரித்த வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர். அவர் தனது திட்ட யோசனை பொது மக்களுக்கு அதிகளவில் நிவாரணமளித்திருப்பதாக கூறினார். எனினும் அதன் பின்னர் மக்கள் அத்தியாவசியப் பொருட்களின் விலையதிகரிப்பால் ஏமாற்றமடைந்தனர்.

இந் நாட்டில் செல்வந்தர் என்றும், வறியோர் என்றும் தெளிவான இரு சமூகங்கள் காணப்படுகின்றன.பொருட்களின் விலையதிகரிப்பு செல்வந்தர்களை ஒரு போதும் பாதிக்கமாட்டாது. அவர்களுக்கு அது நன்மையையே அளிக்கின்றது.

எழுத்தளவில் நன்மைகளை அறிவிப்பதால் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படுவதில்லை. அன்றியும் எமது உற்பத்திகளுக்கு அவ்வளவான சந்தை வாய்ப்புக்கள் கிடைக்காமையாலும், வெளிநாட்டு மூலப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதாலும் பொருளாதார விருத்தியேற்படவில்லை. உதாரணமாக உலக சந்தைகளில் எரிபொருள் விலை அதிகரிப்பதால் மிகவும் பாதிப்படைகிறோம். எரிபொருள் விலையேற்றம் ஏற்படுகையில் பொருட்கள் விலை குறைய முடியாது.

நாம் எப்போதும் அரசு மலிவு விலையில் பொருட்களை வழங்கும் என்றே எதிர்பார்க்கின்றோம். இந்த எதிர்பார்ப்பை நாம் கைவிடாது விட்டால் பொருளாதாரத்தில் முன்னேற முடியாது.

செல்வந்தர்களைப் பாதிக்காமல் வறிய மக்களைப் பாதிக்குமளவிற்கு இதுவரை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதற்கு மாறாக வறிய மக்களை மகிழ்விக்கும் வகையிலேயே இப்போது வரவு செலவுத் திட்டம் தொடர்பாக மக்கள் கருத்தையறிய அரசு தீர்மானித்திருக்கின்றது. இதுவரை சுயநலத்திற்காக தயாரிக்கப்பட்டு வந்த வரவு செலவுத் திட்டம் பொது நலம் கருதி தயாரிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

கீழ் மட்டத்திலிருந்து உயர் நிலைக்கு வருவதைவிடுத்து உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டத்திற்குத் தள்ளப்படும் நிலையே இதன் மூலம் நடைபெறவிருக்கிறது.

வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கு மக்களின் கருத்தை அறிவது வரவேற்கத்தக்கதே. இதுவரை காலமும் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது மத்திய வங்கிக்கும் திறைசேரிக்கும் சாதகமாகவே. உண்மையில் வரவை மிஞ்சிய செலவு ஏற்படுவது எவ்வாறேனும் பாதிப்பையே ஏற்படுத்தும். ஒரு இலக்கு நோக்கியதான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதே சிறந்த பெறுபேற்றைத் தரும்.

இதன் போது கைத்தொழில் வளர்ச்சி, தேசிய உற்பத்தி என்பவற்றை இலக்காகக் கொள்ளுதல் அவசியம். அன்றியும் கிராமிய வளங்களைப் பயன்படுத்தி விவசாயத்துறைக்கு முன்னுரிமை வழங்கப்படுவது முக்கியமாகும். பயன்படாதிருக்கும் விளைநிலங்களில் உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயத்துறையில் விவசாயிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு செயற்பட்டால் நாட்டின் உணவு உற்பத்தி அதிகரிப்பதுடன் இறக்குமதிக்கும் தேவை ஏற்படாதிருக்கும். அந்நிய செலாவணி மிஞ்சும். இன்று வரை இந்நாட்டில் கிராமிய பொருளாதாரம் தொடர்பாக எவ்வித வரவு செலவுத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை. இதனால் கிராம மட்டத்திலான வளங்கள் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்பட்டுள்ளன.

இம்முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் நிதி அமைச்சர் சரத் அமுனுகம பல்வேறு திட்டமிடல்களை முன்வைக்கவிருப்பது தெரிய வருகிறது. பொருளியல் நிபுணரான ஆதர் கிளென் வரவு செலவுத் திட்ட யோசனைகள் மக்களை நெருங்கக் கூடியதாக அமைய வேண்டும் எனக் கூறியிருக்கிறார். விவசாயம் தொடர்பான தேவைகளை பெரிதும் அறிந்திருப்பது அரசியல்வாதிகளும், பொருளியல் விற்பன்னர்களுமல்ல விவசாயிகளே; இது பற்றி அறிந்திருக்கின்றனர். எனவே அவர்கள் எதிர்பார்க்கும் வகையில் உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்துதல், பயிர்ப்பாதுகாப்பு, மண்வளம் என்பன பற்றி விவசாயிகள் அறிந்துள்ளதால் அவர்களுக்கு சாதகமான (சலுகை) வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படுவது அவசியம்.

தற்போது ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள மக்களின் கருத்தறியும் குழுவினர் மக்களின் ஆதரவு பெற்ற குழுவாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள் மக்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பவர்களாக தெரிவிக்கின்றனர் மக்கள் தொடர்பாக அவர்கள் அதிக சிரமத்தையும், அறிவையும் ஈடுபாட்டையும் கொண்டிருப்பவர்கள் என்பதால் இக்குழு போலியானது எனக் கூறமுடியாது.

மக்களின் சொத்து மக்களினுடையதாகவே இருக்க வேண்டும். அவற்றை தனியார் மயப்படுத்துவது பொருளாதாரத்திற்கு பெரும் சாபக்கேடாகும். பொது வளங்களினால் பொது மக்களுக்கு நன்மை ஏற்படாமல் தனியாருக்கே நன்மையளிக்கும். நிதியமைச்சர் இதில் கவனம் செலுத்தல் வேண்டும்.

மக்கள் கருத்துக்கேற்ப வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுமாயின் அங்கு குற்றச்சாட்டுக்களும் ஏற்பட வாய்ப்பிருக்காது. செயற்றிறன் அறிவு உள்ளவர்களை விட ஆழ்ந்த ஆய்வறிவு உள்ளவர்களின் கருத்து நன்மையளிக்கலாம். விவசாயிகளுக்கு செயலறிவு மட்டுமே காணப்படுகிறது.

இம்முறை கருத்தறியும் வரவு செலவுத் திட்டம் சனாநாயக ரீதியிலானது என்பதில் ஐயமிருக்காது. அதனால் இதை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதலாம். செல்வந்தர்களுக்கு மட்டும் நன்மையளிக்கும் வகையில் மட்டும் வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தோர் இம்முறை வறிய மக்கள் நலன்களையும் பாதுகாக்கும் வகையில் தயாரிக்க முனைவது மக்களுக்கு நல்ல சகுனமாகும். இதனால் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் பொருளாதாரத்திற்கு பலம் சேர்க்கும் ஒன்றாக இருக்கலாம். அதனால் அனைவரும் இதில் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும். எனினும் இத் திட்டத்தில் ஈடுபாடு கொண்டோரும், ஈடுபாடற்றவர்களும் இருக்கலாம் நாட்டுக்கு எவ்வாறான இடி விழுந்தாலும் பரவாயில்லை தனது பை மட்டும் நிறைய வேண்டும் என எண்ணுவோர் இருப்பின் அதனால் நாட்டிற்கு ஏற்படுவது பேராபத்தே. அவ்வாறான கொள்கைகளை கை விட்டு இம்முறை வரவு செலவு திட்டத்தை வரலாற்று சிறப்புடைய தாக்குவதே சிறந்ததாகும்.

**றஞ்சித் எல் அபேவிக்ரம**
**(தினமின)**
**தமிழில் வடிவேல்**

## குளங்களின் அலைகரைகளில் குடியமர்ந்துள்ளோர் அகற்றப்படுவர்

### நீர்ப்பாசனத் திணைக்களம் தகவல்

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதி யில் உள்ள குளங்களுக்குச் சொந்தமான காணிகளைப் பிடித்து அடாவடித்தனமாக இருப்பவர்கள் மிக விரைவாக அங்கிருந்து அகற்றப்பட இருப்பதாக நீர்பாசனத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா குளத்தின் கீழ் மட்டும் 30இற்கு மேட்பட்ட குடும்பங்கள் அடாவடித்தனமாகக் காணிகளைப் பிடித்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்று ஏனைய குளங்களின் அலைகரைகளைப் பிடித்து பல குடும்பங்கள் இருப்பதாகவும், இவர்களுக்கு அந்தந்தக் காணிகளுக்கு ஏதாவது ஆவணங்கள் இருப்பின் அதனை சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க மேற்படி குளங்களின் அலைகரைக்குச் சொந்தமான காணிகளுக்கு மின்சாரம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (21)

## ஆறுமாதங்கள் கடந்தும் கொடுப்பனவு இல்லை!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களில் ஒரு தொகுதி மக்களுக்கு மீள்குடியமர்வு நிதி இன்னும் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு மீள் குடியமர்வு நிதி வழங்கவென யாழ். செயலகத்திலிருந்து அதிகாரிகள் வந்து விண்ணப்பங்களில் கையொப்பமிட்டுச் சென்று 6மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னும் 25000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

கையொப்பம் இட்ட போது 15 நாட்களில் உங்களுக்கான பணம் வழங்கப்படும் என்று கூறி ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் இன்னும் பணம் வழங்கப்படவில்லையென்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். (11)

## நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கித்தர ஏற்பாடு

(செட்டிகுளம்)

வவுனியா நடைபாதை வியாபாரிகளின் பிரச்சினை தொடர்பாக வவுனியா அரச செயலகத்தில் விசேட கூட்டமொன்று வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நடைபாதை வியாபாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

நடைபாதை வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கிக் கொடுப்பதாகவும், இதற்கான இடத்தினை தெரிவு செய்யுமாறும் அரச அதிபர் கே.கணேஸ் பிரதேச செயலாளர் திருமதி ஷால்ஸிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் தி.ஞானவேல், உள்ளூராட்சி திணைக்களத்தின் விசேட ஆணையாளர், வவுனியா நகரசபை செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் நடைபாதை வியாபரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (21)




# பறக்கும் குதிரை எது?

எதென்ஸ் ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில், ஏன் ஒலிம்பிக் விளையாட்டுக் களிலேயே மிகவும் முக்கியமாகக் கருதப்படுவதும், கோடிக்கணக்கான விளையாட்டு ரசிகர்களால் மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கப்படுவதும் ஆண்களின் 100 மீற்றர் இறுதி ஓட்டம் தான்.

இந்த நிலையில் 100 மீற்றர் போட்டியில் சம்பியனாகப் போகும் பறக்கும் குதிரை எது என்பதைக் காண உலகம் துடித்துக் கொண்டு


மோரிஸ்கிறீன்

தான் இருக்கும்.

சிட்னி ஒலிம்பிக் (2000) போட்டியில் 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் தங்கம் வென்றவர் மோரீஸ் கிறின் என்ற அமெரிக்க வீரர். அவர் வெல்ல எடுத்த நேரம் 9.87 வினாடிகள்.

1996 அட்லாண்டா ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் புதிய உலக சாதனை (9.84) படைத்து தங்கப் பதக்கம் வென்றார். 1995 இல் உலக சம்பியனான டோனாவான் பேய்லி (கனடா), அந்த உலக சாதனையை 1999 ஜூன் 16 அன்று முறித்தவர் க்ரீன்(9.79), எதென்ஸ் ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் தான் க்ரீன் அந்தச் சாதனையைப் படைத்தார். அந்தச் சாதனையை 2002 செப்ரெம்பர் 14 அன்று பரிசில் நடந்த க்ராண்ட்ப்ரீ போட்டியில் தங்கம் வென்ற போது முறித்தார். அமெரிக்க வீரர் டிம்மான்ட் கோமரி. புதிய உலக சாதனை (9.78) படைத்த மான்ட் கோமரிக்கு 100,000 டொலர் பரிசுப் பணமும், 100,000 டொலர் போனசும் கிடைத்தது.

விலக்கப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியவர் என்ற சந்தேகத்திற்குள்ளாகியிருக்கிறார் மான்ட் கோமரி. எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு அமெரிக்க வீரர்களை தேர்வு செய்யும் போட்டி ஸாக்ரமென்டோவில் நடந்தபோது 7ஆவதாக வந்து தகுதி பெறத் தவறினார் மான்ட் கோமரி (10.13).

அப்போட்டியை க்ரீன் (9.91) வென்றார். ஜஸ்டின் காட்லின் (9.92), ஷான் க்ராபோர்ட் (9.93) அப்போட்டியில் 2ஆவதாகவும், 3ஆவதாகவும் வந்தனர். க்ரீன் அந்த ஓட்டத்தை வெல்ல எடுத்த நேரம் (9.91). கடந்த 2 ஆண்டுகளில் காற்று உதவி இல்லாமல் 100 மீற்றர் ஓட்டத்தை முடிக்க எடுத்த அவரது மிகச்சிறந்த நேரம். 10 வினாடிகளுக்கு உட்பட்ட நேரத்தில் 100 மீற்றர் ஓட்டத்தை க்ரீன் முடித்தது அது 47 ஆவது முறையாகும்.

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் 2 ஆண்டுகளுக்கு முன் அவருக்கு காயம் ஏற்பட்டிருந்ததாம். அதிலிருந்து முற்றிலும் தேறி விட்டதாகக் கூறிய அவர் தனக்குப் பிடித்த நகரமான எதென்சில் ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தை வெல்லும் நம்பிக்கையோடு இருப்பதாகக் கூறினார். கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம் (வரலாற்றிலேயே மிகச் சிறந்தவன். என்று ஒரு கரத்தில் பச்சை குத்தியிருக்கிறாரே க்ரீன்.

1997 இல் முதன் முறையாக உலக சாம்பியன் போட்டியில் க்ரீன் தங்கம் வென்றது எதென்சில் தான். அங்கு தானே அவர் முன்பு உலக சாதனையும் படைத்தார். எதென்சில் 100 மீற்றர் ஓட்ட ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தை அவர் வெல்வாரா?. வென்றால், தடகள மாவீரனாகத் திகழ்ந்த கார்ல் லூயிஸின் 100 மீற்றர் ஒலிம்பிக் சாதனையை க்ரீன் சமன் செய்தவராவார்.




இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து 100 மீற்றர் தங்கப்பதக்கம் வென்றுள்ள ஒரே வீரர் கார்ல் லூயிஸ் தான். 1984 லாஸ் ஏஞ்செலஸ் ஒலிம்பிக் போட்டியிலும் (9.99), 1988 ஸோல் ஒலிம்பிக் போட்டியிலும் (9.92- புதிய ஒலிம்பிக், உலக சாதனை) வெற்றி பெற்றவர் லூயிஸ். ஸோல் ஒலிம்பிக் போட்டியில் பென்ஜான்ஸன் (கனடா) தான் முதலாவதாக வந்தார். ஆனால் அவர் விலக்கப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தியவர் என்று உறுதியானதும் வெள்ளி பெற்ற லூயிஸிற்கு தங்கம் தரப்பட்டது. 1991 இல் லூயிஸின் உலக சாதனையை அமெரிக்க வீரர் லெராய் பர்ரெல் (9.90) முறித்தார். அந்த ஆண்டு லூயிஸ் மீண்டும் உலக சாதனை படைத்தார் (9.86). அதை 1994 இல் லெராய் பர்ரெல் (9.84) முறித்தார். இப்போது உலக சாதனைக்கு சொந்தக்காரராக இருப்பவர் மான்ட்கோமரி. எதென்ஸ் ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பதக்கங்கள் அனைத்தும் அமெரிக்க வீரர்களுக்கே கிடைக்கும் என்று கூறியுள்ளார் 30 வயது க்ரீன். 'யு.எஸ்.ஏ.டுடே' என்ற பிரபல பத்திரிகை க்ரீன் தங்கமும், அமெரிக்க வீரர் ஷான்க்ராபோர்ட் வெள்ளியும் வெல்வார்கள் என்று எதிர்பார்க்கிறது. வெண்கலம் ஜமேய்க்க வீரர் ஆஸாபா பவலுக்கோ அல்லது அமெரிக்க வீரர் ஜஸ்டின் கேட்லினுக்கோ செல்லுமாம். இந்த ஸீஸனில் தோல்வி காணாதவராய் இருக்கிறார் 21 வயது பவல். ஓகஸ்ட் 31 அன்று லண்டனில் நடந்த ஒரு போட்டியை வென்ற (9.91) அவர் 6 நாட்கள் கழித்து சூரிச்சில் நடந்த ஒரு போட்டியை (9.93) வினாடிகளில் வென்றார். இந்த 2· பந்தயங்களிலும் க்ரீனைத் தோற்கடித்தவர் பவல்.

2002 கொமன்வெல்த விளையாட்டுப் போட்டிகளிலும், 2003 பாரீஸ் உலக சாம்பியன் லீப் போட்டியிலும் தங்கம் வென்ற கிம்கேலின்ஸ் கேட்லின், பிரான்சில் ஒபெக்வேலு (போர்த்துக்கல்), மார்க்லூயிஸ் பிரான்ஸிஸ் (பிரிட்டன்) ஆகியோரையும் தோற்கடித்த பவல், இம்முறை தங்கம் வெல்ல வேண்டும் என்ற ஆவலுடன் உள்ளார். இந்த நிலையில் தற்போது தகுதிகாண் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் வேகமாகப் பாயும் குதிரை எது என்பதை அறிந்திருப்பீர்கள்.

# பலப்பரீட்சையில் யாருக்கு முதலிடம்?

உலகின் கிரிக்கெட் விளையாடும் அணிகளில் தற்போதும் அவுஸ்திரேலிய அணி முதலாம் இடத்தில் உள்ளது. அது மூன்று முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கிறது. அது போல் இந்தியா, பாகிஸ்தான் தலா ஒரு முறையும்,மேற்கிந்திய தீவுகள் இருமுறையும் கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளன.

இந்நாடுகளின் கிரிக்கெட் வரலாறு சிறிலங்காவின் வரலாற்றைவிட சற்று முந்தியகாலமாகும். அதாவது சிறிலங்காவுக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்தது ஏனைய நாடுகளுக்குப் பின்னரே. எனினும் உலகப்படத்தில் சிறுபுள்ளியாகக் காணப்படும் சிறிலங்கா அணியும் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியமை அதன் கிரிக்கெட் வரலாற்றிற்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது.

எனினும் 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைககைப்பற்றிய பின்னர் அணித்தலைவர் அர்ஜுண ரணதுங்க அரவிந்த டி சில்வா போன்றோரின் ஓய்வுக்குப் பின்னர், ஜெயசூரியவின் தலைமையில் அணி வழிநடத்தப்பட்டது. இக்காலங்களில் அணியின சிறப்பு சற்று மந்தமாகியதுடன், கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலும் சிறிலங்கா பிரகாசிக்கத் தவறிவிட்டது.

ஜெயசூரிய சிறந்த சகல துறையாட்டக்காரராக இருந்தும்



இவ்வாறான வீழ்ச்சியால் அவரின் அணித்தலைமை பறிக்கப் பட்டு மாவன் அத்தப்பத்து, றொஷான் திலகரெட்ண ஆகியோரிடம் வழங்கப்பட்டது. அதன் படி மாவன் அத்தப்பத்து ஒருநாள் போட்டிகளுக்கும், திலகரெட்ண டெஸ்ட் போட்டிகளுக்கும் அணியை வழி நடத்தினர்.

இவ்வணி கடந்தவருட பிற்பகுதியில் இங்கிலாந்துடனான போட்டியில் வெற்றியையும், அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் தோல்வியையும் சந்தித்தது. அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் தோல்வியைத் தழுவினாலும் அணியின் ஆட்டத்திறன் வரவேற்கப்படக் கூடியதாகவே இருந்தது.

அதன் பின்னர் தொடர்ந்து ஓய்வின்றி போட்டிகளில் கலந்து கொண்டு வரும் சிறிலங்கா அணியினர் தமது திறமையை வெளிப்படுத்தியே வந்துள்ளனர்.



பலமிக்க அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் மோதிய கையோடு மிகப்பலம் மிக்க பாகிஸ்தான், இந்திய அணிகளை தனது சொந்த மண்ணில் சந்தித்த சிறிலங்கா மிகப்பெரும் சவால் விடுத்த இந்திய அணியுடன் மட்டும் ஒரு போட்டியில் நான்கு ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்து இறுதியில் ஆசியக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

சகலதுறை வீரர் ஜெயசூரிய இடையில் சிறிது மந்தகதியைக் காண்பித்தாலும் அண்மைய போட்டிகளில் அவர் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் என்பதை நிரூபித்துள்ளமை சிறிலங்கா அணிக்கு பலத்தை அதிகரித்துள்ளது. அத்துடன் முரளிதரனின் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் சமிந்தவாஸ், நுவான்சொய்ஸா, மாலிங்க ஆகியோரின் பந்து வீச்சும் குறிப்பிட்டளவு முன்னேறியிருக்கிறது.

டெஸ்ட் தொடரை வென்று 5 ஒரு நாள் போட்டிகளிலும் 2-0 என்ற நிலையில் முன்னணி வகிக்கும் சிறிலங்கா தற்போது தரப்படுத்தலில் தென்னாபிரிக்க அணியையும் நியுசிலாந்தையும் பின்தள்ளி இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ள நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மினி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றி அவுஸ்திரேலியாவின் இடத்தைத் தக்கவைக்குமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

— வடிவேல்

# புறக்கணிப்பா?

யாழ். மாவட்டத்தில் உள்ள வடமராட்சி கிழக்கு விளையாட்டுத் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. குறிப்பாக மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 20 விளையாட்டுக்கழகங்களும்74 பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 13 விளையாட்டுக்கழகங்கள் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ளன. மீதி 07 விளையாட்டுக கழகங்களும் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ளன. இங்கு எவ்வளவோ திறமையான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் இருந்தும். இவர்கள் இலைமறை காயாகத்தான் உள்ளனர். இங்கு தடகள விளையாட்டு என்றால் வருடத்தில் ஒருமுறைதான் நடைபெறும். அதுவும் பதிவு செய்த விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டியாக இது உதவி அரச அதிபரினால் நடத்தப்படும். இதைத்தவிர வேறு யாரும் நடத்துவதும் இல்லை; நடத்த முன்வருவதுமில்லை. கபடி விளையாட்டு என்றால் குறிப்பாக வடமராட்சி கிழக்கில் இரு விளையாட்டுக்கழகங்கள் தான் பங்குபற்றுகின்றன. குடத்தனை செல்வா வி.க, பொற்பதி சென்பீற்றர் வி.க-இவை இரண்டும் தான் பங்குபற்றி வருகின்றன. மீதி 18 விளையாட்டுக்கழகங்களும் பங்குபற்றுவதில்லை. காரணம் கபடி பற்றிய முழுமையான பயிற்சியின்மையாகும். இது சம்பந்தமான பயிற்சியை வழங்குவதற்குத் தகுதியான பயிற்றுவிப்பாளர்கள் கூட இல்லை. தற்போது சர்வதேச ரீதியாக கரப்பந்தாட்டம் செற்ராம் முறையில் (பாசிங்) நடைபெறுகின்றது. அதுவும் ஒருசில விளையாட்டுக்கழகங்கள் தான் விளையாடுகின்றன. அவை பற்றிய முழுமையான பயிற்சிகள் இப்பகுதி விளையாட் டுக்கழகங்களுக்கு இல்லை. மற்றையது வலைப்பந்து.

இதிலும் ஒரு சில விளையாட்டுக்கழகங்கள் தான் பங்குபற்றுகின்றன. இவை பற்றிய பயிற்சியும் இல்லை. மற்றையது கிரிக்கெட் (மென்பந்து) இவை பற்றிய ஓரளவு பயிற்சிகள் இருந்தாலும்; இவைகள் எல்லா விளையாட்டுக்கழகங்களுக்கும் இல்லை. உதைபந்து பற்றிய பயிற்சி எல்லா விளையாட்டுக்கழகங்களுக்கும் போதியதாக இல்லை. இவை பற்றிய 50% பயிற்சிகள் இருக்கின்றன. இருந்தாலும் காலணிகள் போட்டு விளையாடும் கழகங்கள் சிலதான். அற்றிலும் அனைத்து வீரர்களும் போடுவதில்லை. யாழ்.மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற இடங்களில் விளையாட்டுத்துறையினரின் ஏற்பாட்டில் பல பயிற்சிகள் வழங்கப்படுவதாக பத்திரிகையினூடாகவும், வானொலியினூடாகவும் வடமராட்சி கிழக்கு மக்கள் அறிந்து வருகின்றார்கள்.

தற்போது வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளர்களினால் உதைபந்தாட்டம் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகிறது. யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினரால் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்கள் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள கழகங்கள் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்படுகின்றது. யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினரால் ஏன் வடமராட்சி கிழக்கு விளையாட்டு வீரர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்?. இந்நிலையை மாற்றிவடமராட்சி கிழக்கு விளையாட்டுக்கழகங்களுக்குப் போதிய வழங்கி திறமையான வீரர்களை இனம்காண வேண்டும் என்பதே இப்பிரதேச மக்களின் அவாவாக உள்ளது.

இ.முரளிதரன்
வடமராட்சி கிழக்கு

# 41% பெற்றோல் நிரப்பு நிலையங்களை இந்தியாவிடம் கையளிக்க ஆலோசனை

-கடனைச் செலுத்துவதற்கான ஏற்பாடாம்

(கொழும்பு)

**பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வங்கிகளுக்கு வழங்கவேண்டிய பலகோடி ரூபா பணத்தை வங்கிகளுக்கு மீளச்செலுத்தும் நோக்கத்திற்காகவே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 41சதவீத பெற்றோல் நிரப்பும் நிலையங்களை இந்திய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறதென நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டின் பொருளாதார நாடிகளாகக் கருதப்படும்பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், போக்குவரத்துச்சபை, இரயில்வே திணைக்களம், முதலீட்டுச்சபை என்பனவற்றை நடாத்துவதற்கு மாதாந்தம் திறைசேரியில் இருந்து கோடிக்கணக்கான நிதிவழங்கப்படுகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வங்கிகள் கடன் வழங்க மறுத்து வருகின்றன.

ஏற்கனவே வங்கிகளில் பெற்ற கோடிக்கணக்கான கடன் பணத்தைச் செலுத்தாமை காரணமாகவே அவை கடன் வழங்க மறுக்கின்றன.

இவ்வாறு கடனால் தத்தளிக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவே அவற்றின் 41 சதவீதமான எரிபொருள் நிரப்பும் நிலையங்களை இந்திய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கும் அதன்மூலம் கிடைக்கப்பெறும் ஐம்பதாயிரம் டொலர்நிதியை வங்கிக்குச் செலுத்தவும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றதென அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக அரசாங்க மட்டத்திலும் அமைச்சரவை மட்டத்திலும் ஆராயந்த பின்னரே இறுதிமுடிவு காணப்படும எனவும் அவர் கூறினார்.

## சில வாரங்களில் விலை உயரும்

சீனி,மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்களை சிறிலங்கா அரசுநீக்கவுள்ளதால் அடுத்து வரும் வாரங்களில் அவற்றின் விலைகள் உயரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (32)

## பெற்றோலிய ஊழியர் போராட்டம் பின்னணியில் சிரேஷ்ட அமைச்சர்

### சனாதிபதி செயலணிக் குழு சனாதிபதிக்குத் தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தபான ஊழியர்களின் போராட்டத்தின் பின்னணியில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் இருப்பதாக சனாதிபதி செயலணிக் குழு கூறுகிறது.

இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 107 எண்ணெய்க் குதங்களை விற்பது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் ஆராய்ந்து வருகையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் போராட்டம் நடாத்தியதுடன் தொடர் போராட்டத்திற்குத் திட்டமிட்டிருந்தனர்.

எனினும், அவ்வாறு அவற்றை விற்பனை செய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என சனாதிபதியால் அறிவிக்கப்பட்டதையடுத்து போராட்டங்கள் கைவிடப்பட்டன.

இந்நிலையில், இப்போராட்டங்களின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் செயற்பட்டுள்ளார் என சனாதிபதி செயலணி ஆணைக்குழு சனாதிபதிக்குத் தெரிவித்துள்ளது.

## சுதந்திர சதுக்கத்தைப் படம்பிடிக்க உள்நாட்டவருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

சுதந்திர சதுக்கத்தை படம் பிடிக்க உள்ளூர் படப்பிடிப்பாளர்களுக்கு சுதந்திரம் இல்லையெனக் குறை கூறப்படுகின்றது.

அதிகளவான வெளிநாட்டவர்கள் சுதந்திர சதுக்கத்தைப் படம் பிடிக்க அனுமதிக்கப்படுகின்றனர்; ஆயினும், உள்ளூர்ப் படப்பிடிப்பாளர்களுக்கு அதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்கள் வன்செலாவணியை நாட்டிற்குக் கொண்டுவருகின்றார்கள். அவர்கள் பல சலுகைகளை வழங்குகிறார்கள் என சதுக்கத்தின் முகாமையாளர் கூறியிருப்பதாக ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## நாடகங்கள், திரைப்படப் பிரதிகளை அனுமதியின்றி வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

அனுமதியின்றி தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்களின் பிரதிகளை விற்பனை செய்ததற்காக வீடியோக் கடை உரிமையாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கொள்ளுப்பிட்டியில் 1777 பிரபல தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் படங்களின் வீடியோப் பிரதிகளை விற்பனைக்காக வைத்திருந்த கொத்தலாவல என்ற இந் நபர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு கோட்டை நீதவான் முன் ஆஜர் படுத்தப்பட்டார்.

இவரை வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் சரத்கருணாரட்ண உத்தரவிட்டுள்ளார்.

## கருத்துமோதல் இருந்தும் சமாதானமாக உள்ளோம்

### பெர்னாண்டோ புள்ளே கூறுகிறார்

(கொழும்பு)

சனநாயகம் என்ற ரீதியில் எந்தக்கட்சிக்கும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உரிமைகள் உண்டு. ஆகவே ஜே.வி.பி தனது கருத்துக்களை வெளியிடுவதில் எந்தத் தவறுகளும் இல்லை.

எமது கட்சிகளுக்கிடையில் கருத்துமோதல்கள் அடிக்கடி ஏற்பட்டாலும் கட்சிக்குள் சமாதானமாகவே இருக்கின்றோம். என வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேஅறிவித்துள்ளார்.


**தமிழீழ போக்குவரவுக் கழகத்தில் பருவகாலச் சீட்டுப் பெற்று பயணம் செய்வோர் கவனத்திற்கு**

கடந்த காலங்களில் தமிழீழ போக்குவரவுக்கழகத்தில் பருவகாலச்சீட்டுப் பெற்று பயணம் செய்வோருக்கு மட்டும் தொடர்ந்தும் சீட்டுக்கள் வழங்கப்படும். இப்பருவ காலச்சீட்டுக்கள் ஒவ்வொரு மாதமும் 25ஆம் நாள் தொடக்கம் 30ஆம் நாள் வரை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பளை, கிளிநொச்சி, புளியங்குளம், மல்லாவி ஆகிய இடங்களில் நேரக்கணிப்பாளரால் பேருந்து நிலையங்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வழங்கப்படும்.



புரட்டாதி மாதத்திலிருந்து புதிதாகப் பருவகாலச்சீட்டு வழங்குவது இடைக்காலத்திற்கு நிறுத்தப் பட்டுள்ளது. புதிதாக பருவகாலச்சீட்டு பெற விண்ணப்பம் செய்வோருக்கு சீட்டுக்கள் வழங்கப்பட மாட்டாது என்பதை அறியத் தருகின்றோம்.

தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-9799)



**யாழ். வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் யாழ். வர்த்தகக்கண்காட்சி-2004**

**ஒகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி**

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள்,வர்த்தகர்கள், தொழில்நுட்பநிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

(சி-10128)



# வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின்
## 201 ஆம் ஆண்டு நிறைவு நினைவு வெற்றி விழா 2004
# சிறப்பிதழ்



## வன்னியின் வரலாற்று நாயகனுக்கு வெற்றி விழா

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒன்றாக இருக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கற்சிலைமடு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கற்சிலைமடு என்னும் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் கற்பொறிப்பு, வன்னியின் வரலாற்று நாயகனின் வீரத்தையும், தீரத்தையும் பறைசாற்றி நிற்கின்றது. நான் இம் முல்லை மாவட்டத்தின் அரசாங்க அதிபர் பணியைப் பொறுப்பேற்றதிலிருந்து இந்த ஆண்டுடன் 3ஆவது விழாவுக்கு தலைமை தாங்கும் பாக்கியத்தையும் பெற்றுள்ளேன். இது எனக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. முல்லை மாவட்டத்தின் அரசாங்க அதிபர் என்ற வகையிலும், முல்லை மாவட்ட பண்டாரவன்னியனின் அறங்காவற் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் இவ் விழாவை நன்கு உற்றுநோக்கும் போது உண்மையிலேயே இந்நிகழ்வு ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவே காணப்படுகின்றது. காரணம் ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி ஏந்தி இறுதி மூச்சு வரை உறுதியோடு போரிட்ட காரணத்தால் தான் அவ்வீரனின் சிறப்பை வெளிக்காட்டக் கற்சிலை மடுவில் ஆங்கிலேயரி னால் கற்பொறிப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதன் காரணத்தினாலே கற்சிலைமடு என்ற பெயரே அக்கிராமத்திற்கு இடப்பட்டுள்ளது. 1803-8-25 முல்லைத்தீவுக் கோட்டையை கைப்பற்றிய வன்னியின் இறுதித் தமிழ் மன்னனாகத் திகழ்ந்த வரலாற்று நாயகனான மாவீரன் பண்டார வன்னியனுக்கு 201ஆவது ஆண்டு நிறைவு விழா 25-08-2004இல் மிகக் கோலாகலமாகக் கற்சிலைமடுவிலேயே அவரது உருவச்சிலை அமைந்திருக்கும் வளாகத்தில் இடம் பெறுவது சிறப்புக்குரியதே.

**திருமதி. இமெல்டா சுகுமார்,**
அரசாங்க அதிபர்
முல்லைமாவட்டம்,தலைவர்,வன்னியன் அறங்காவற் கழகம் முல்லை மாவட்டம்.

## மாவீரன் பண்டாரவன்னியன்

"வாழ்ந்தாலும் வரலாறு வீழ்ந்தாலும் வரலாறு"

என்பதற்கேற்ப மாவீரன் பண்டாரவன்னியன் வன்னியை ஆளும்போதும், அந்நியருடன் மோதும் போதும் வரலாற்றுப் பதிவுகளுடன் வாழ்ந்தான் என்பதை இன்றைய 201 ஆவது வெற்றி விழா துலங்கவைக்கின்றது. 1803.08.25 ஆம் நாள் அவன் படைத்த வெற்றி முத்திரைக்கு இன்றும் மேற்கு ஐரோப்பா பதில் சொல்ல முடியவில்லை. பீரங்கியும், ஆளணியும் பொருளாதாரப் பலமும் கொண்டு உலகையே விழுங்கிவந்த ஆங்கிலேயப் பேரரசு பண்டார வன்னியனின் போர்த்தந்திரத்தின் முன்னால் மார்பு காட்ட முடியாது முதுகுகாட்டி ஓடினார்கள் என்பதும் பாரிய கோட்டை பண்டார வன்னியனால் நிர்மூலமாக்கப்பட்டு ஆயுதக் களஞ்சியங்கள் கைப்பற்றப்பட்டதென்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்று உண்மைகளாகும். அப்படியானால் பண்டார வன்னியன் மாவீரன் என்பதை எவர்தான் மறுப்பார். அந்த வீரன் இட்ட அத்திவாரம் இன்று தமிழீழத்தில் பெரும்கோட்டையாகியிருக்கிறது. அண்ணன் பிரபாகரன் 17 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களால் விண்வரை அந்த வீரக்கோட்டையை கட்டி வளர்த்துள்ளார். நீதியான இந்த வீரத்தின் முன் உலக வல்லமைகள் கூட வணங்குவதைத்தவிர வேறு வழியின்றித் தவிக்கின்றன.இந்த நாளில் மாவீரன் பண்டார வன்னியனின் 201ஆவது வெற்றி நாள் சிறப்பு அவசியம் வேண்டியதாகும். அவனது வீரத்தையும், உறுதியையும் இன்று போற்ற வேண்டும் என்று அதன் வழி நினைவை விழாவாக்கிய அறங்காவல் கழகத்திற்கு எனதினிய பாராட்டுக்களுடன், விழா சிறப்பிக்க வாழ்த்தும்

**ச. கனகரத்தினம்**
வன்னி பாராளுமன்ற உறுப்பினர்.

## வன்னி மண்ணின் வரலாற்று நாயகன் மாவீரன் பண்டார வன்னியன்

வீரம் விளைநிலம் - வெண்சமர் வான்நிலம் - தீரம்செறிநிலம்- திக்கெட்டும் புகழ்மணம்.இதுவன்னி மாண்பு- வன்னிநாடு வளமுடைத்து- செந்நெல்லும் தேனும் தீம்பலவும் -வாழையும் சோலையும் -வற்றாத நீர்வளமும் - இந்த மண் எங்களின் சொந்தமண் என்று மாண்பு கூறி அன்று வாழ்ந்தார்கள். இன்று வாழுகிறார்கள் இன்றும் வாழ்வார்கள் இம் மண்ணில்.

வடக்கே ஆனையிறவு பரவைக்கடலையும், தெற்கே நவரலாவேவ என்ற அனுராதபுரத்தையும், கிழக்கே திருமலையையும், மேற்கே மன்னார் கடற்பரப்பையும் எல்லையாகக் கொண்ட பிரதேசமென வரையறை செய்யப்பட்டுள்ளது இப்பிரதேசம் வன்னிப் பிரதேசம். இங்குவாழும் மக்கள் வன்னியர் ஆவர். வன்னியென்றால் வீரத்தின் விளைநிலம் என்றும், வன்னியர் என்றால் வீரம்செறிந்தவர்கள் என்றும் கூறுதல் கடப்பாடு. மேலாக வன்னியர் நாலான அக்கினி புராணத்தில் வன்னியர்கள் அக்கினியில் இருந்து தோன்றியவர்கள் என்ற கருத்தும் நோக்கற்பாலது.

வன்னிப்பிரதேசம் பல்வேறு பற்றுக்களாக அமையப் பெறினும் அவர்கள் போர்த்துக்கேயர்- ஒல்லாந்தர்- ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிபணிய மறுத்து அவர்களுக்கு அடங்காது வாழ்ந்தமையால் இது அடங்காப்பற்று எனவும் அழைக்கப்படும்.இன்றைய நாள் ஒரு நன்நாள். வெற்றிவிழாக் கொண்டாடும் பெருநாள்.

குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் வன்னியின் இறுதி மன்னன். அஞ்சா நெஞ்சன். பார்புகழும் வல்லாளன். 1700 ஆம் ஆண்டின் முடிவுறு காலங்களிலும் 1800 ஆம் ஆண்டு ஆரம்ப காலப்பகுதிகளிலும் அந்நியர்கள் எம் மண்ணை ஆண்டார்கள். ஆளவிளைந்தார்கள். கறுவா வாங்கவந்த அயல்நாட்டார் எம்மண்ணில் சாயவேரையும், யானைகளையும், யானைத்தந்தங்களையும் கப்பமாகக் கேட்டு ஆட்சிபுரிய முற்பட்டார்கள். கப்பம் தரமறுத்து அடங்காது நிமிர்ந்து நின்றான். அடங்காப்பற்றின் அதிபதி பண்டார வன்னியன். ஆங்கிலேயருடன் நேரடியாகவே சமர்செய்தான். இலங்கையின் சகல பாகங்களையும் கைப்பற்றி ஆட்சிசெய்த ஆங்கில ஏகாதிபத்தியம் வன்னியைக் கைப்பற்ற முடியாது கலங்கியது, வெட்கித்தலைகுனிந்தது. முல்லைத்தீவிலே ஆங்கிலேயர் பலம்பொருந்திய ஒரு கோட்டையைக் கட்டினார்கள். வளம்செய்து பலப்படுத்தினார்கள்.

அந்தக் கோட்டை25.08.1803 அதிகாலை பண்டார வன்னியனின் படையணியின் அதிரடித்தாக்குதலுக்கு இலக்கானது. கோட்டை தகர்ந்தது. அந்த நிகழ்வின் வெற்றிவிழா இன்று கற்சிலைமடு பண்டாரவன்னியன்

**எஸ்.தில்லையம்பலம்**
**(பொருளாளர்- பண்டார வன்னியன் அறங்காவல் கழகம)**

உருவச்சிலை முன்றலில் எடுக்கப்படுகிறது. பண்டாரவன்னியன் அறங்காவல் கழகத்தினரின் அயராத முயற்சியால் பண்டாரவன்னியன் -வன்னிமாவீரன் வரலாறு மேலும் வளம்பெறவாய்ப்பு உண்டென்றால் அது மிகையல்ல.

பண்டாரவன்னியன் புகழ்
வாழ்க .............. வளர்க..............

## ஆங்கிலேயர் கோட்டையை வெற்றிகொண்ட வீரத் திருநாள்

பண்டாரவன்னியன் ஈட்டிய முல்லை நகர் வெற்றியின் 201 ஆம்ஆண்டு விழாவை எழுச்சியோடும், சிறப்போடும் வழமை போன்று நடத்த முல்லை பண்டார வன்னியன் அறங்காவற் கழகம் முன்வந்திருப்பது முல்லை மக்கள் மட்டுமன்றி தமிழ் கூறும்நல்லுலகமெங்கும் பெருமைப்படும் பெரு நிகழ்வாகும்.

ஒல்லாந்தரையும், ஆங்கிலேயரையும் எதிர்த்து வன்னியில் வீரப்போர் புரிந்த கடசி ஈழத்தமிழ் மன்னான பண்டார வன்னியன் முல்லை நகரிலிருந்த ஆங்கிலேயர்களின் கோட்டையை வெற்றி கொண்டு மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிய ஆயிரத்து எண்ணூற்று மூன்று ஆகஸ்ட் 25 ஆம் நாளான வீரததிருநாளைப் பெருமையோடும், எழுச்சி யோடும் நினைவு கூரும் 201 ஆவது ஆண்டு விழாவை, தமிழினத்தை இன்று உலகின் பார் வையில் உயர்ந்து நிற்கவைத்த ஓயாத அலை-03 வெற்றிச் சமரை எமது பெரும் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தொடக்கிவைத்த மண் ணில் கொண்டாடுவது சாலப்பொருத்தமானதே.

வீரமறவன் பண்டார வன்னியன் தோற்கடிக்கப் பட்டதாக ஆங்கிலேயப் படைத்தலைவன் பெருமை கொண்டநாளை பண்டார வன்னியனின் நினைவு நாளாகக் கொண்டாடி வந்த நிலையை மாற்றி பண்டார வன்னியனின் வெற்றியைப் பறைசாற்றும் முல்லை பெரு வெற்றியின் ஆண்டு விழாவாக கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பண்டார வன்னியன் அறங்காவற் கழகம் ஈழத்தமிழினத்தின் வரலாற்று விழிப்புணர்வையும் விடுதலை வேட்கையையும் தூண்டும் வகையிலே கொண்டாடி வருவதை பேருவகையுடன் வரவேற்ப தோடு, மேற்படி விழா சிறக்க தொகுக்கப்படும் சிறப்பு மலர் நறு மணம் கமழ வாழ்த்துகிறேன்.

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்.

**வெ. இளங்குமரன்,**
பொறுப்பாளர்,தமிழீழ கல்விக்கழகம்,
தமிழீழம்.

## வீரம் விளைய வித்திட்ட மாவீரன்

மாவீரன் பண்டாரவன்னியனின் தமிழ் உணர்வும், தமிழன் என்ற மான உணர்வும், தமிழ் மண் பற்றும் பொன்னால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்று உண்மைகளாகும். "பீரங்கியுடன் வந்தாலும் எங்கள் வீரவாள் பதில் சொல்லும்" ,"வாள் முனையில் வரிந்து நிற்பது எங்கள் வீரத் தமிழ் மொழி" என்றுரைத்த அவன் வார்த்தையின் பெறுமானம் தான் என்ன? இத்தனைக்கும் முடிபோல் அமைந்தது 1803-08-25 இல் முல்லை மாநகரில் இடம் பெற்ற வெற்றிப் போர். படை பலம், ஆயுதபலத்துடன் இருந்த கோட்டையை வீழ்த்தி ஆயுதக் களஞ்சியத்தையும் கைப்பற்றினான் என்றால் அந்த நாளை தமிழ் உலகு எளிதில் மறந்துவிடுமா? அந்த நினைவை மீட்பதே இந்த 201ஆவது ஆண்டு வெற்றிநாள். அதுவே தமிழர் வீரத்தை உலகுக்குக் காட்டிய முதல் நாளாகும்.

மாவீரன் பண்டாரவன்னியன் வீரம் விதைத்தான். அந்த வீரம் தலைவர் மேதகு வே. பிரபாகரன் காலத்தில் விளைந்து நிற்கிறது. 17 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களை உரமாகக் கொடுத்து அவர் தியாகத்தால் விளைந்த வீரம் இன்று விண்மண் எங்கும் விழுது விட, அதன் வெற்றிகள் உலகை மெய்சிலிர்க்க வைக்கின்றன. ஈழத்தமிழர் வரலாற்றில் இவ்வாறான வெற்றிகள் தொடரும். பூரண உரிமை பெறும் வரை தொடரும் வெற்றிப் போருக்கு விதையானவர்களுக்கு விழா எடுப்பது தமிழர் தேசியக் கடமையாகும். அந்தக் கடமையை நல்கும் அறம் காவல் கழகத்திற்கு எனது நல்வாழ்த்துக்கள்.

**செ. முகுந்தன்,**
அரசியல்துறை, முல்லைத்தீவு மாவட்டம்.

## வெற்றி வீரனுக்கு விழா எடுப்போம்

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு மேலாக வன்னிப் பெருநிலப்பரப்பில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அரசோச்சிய வேளை, ஆங்கிலேயப் பேரரசு இலங்கையின் பல பாகங்களையும் தனது இறைமைக்குள் கொண்டு வந்தவேளை, வன்னியின் இறைமையை இழக்க முடியாது என்றும்,இந்த மண் அடங்காப்பற்றுக் கொண்டது என்பதையும் எடுத்துக்காட்டிய வீரன்தான் மாவீரன் பண்டாரவன்னியன். அவ்வீரனின் வீரத்தையும், தீரத்தையும் வெளிக்காட்டும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட பண்டாரவன்னியன் அறங்காவற் கழகம் 201 ஆவது ஆண்டு, வெற்றி நிறைவு விழாவைக் கற்சிலைமடுவிலே கொண்டாடுவது பாராட்டுவற்குரியது. அவ்வாறுகொண்டாடப்படுகின்ற விழா சிறக்க, ஈழநாதம் பத்திரிகையில் வெளிவரும் சிறப்பிதழில் வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு. மு. சண்முகராசா,**
நீர்ப்பாசனப் பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா,
முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்.

## வன்னி வீரன்

தமிழர்கள் வீரப்பரம்பரையினர் அவர்கள் மான உணர்வுடையவர்கள் என்பதை உணர்த்தியவன் பண்டாரவன்னியன். அவனது 25.08.1803 ஆம் நாள் சாதனை நல்லதோர் எடுத்துக்காட்டாகும். உலக வல்லரசுகள் ஒதுங்கி நிற்கும் பலம்கொண்ட அந்த ஆங்கிலேயனுக்கு எதிராக முல்லைத்தீவில் போராடி கோட்டையைக் கைப்பற்றியது மறக்க முடியாத வீரச் செயலாகும். கப்பமும்,இறைமையும் என்றும் தரமுடியாது என்று கடைசிவரை போராடிய வீரன். உண்மையில் தமிழுக்குக் கிடைத்த முதல் வீரன்தான். அந்த வீரனின் 201 ஆவது நினைவு எனது ஒட்டுசுட்டான் பகுதயில் நடைபெறுவதாலும், ஒட்டுசுட்டான் பகுதியில் அம்மன்னனின் போர்ச் சுவடுகள் உண்டு என்பதாலும் நான் பெருமை அடைகின்றேன். அவ்வீரனுக்காக எடுக்கப்படும் விழாவை வாழ்த்தி நிற்கின்றேன்.


**திருமதி ந. செல்வராசா,**
உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலர்,
ஒட்டுசுட்டான்.

**விளம்பர அனுசரணை**
நீர்பாசனப் பொறியிலாளர் பணிமனை
முத்துஐயன் கட்டு, ஒட்டுசுட்டான்

**இதழ் ஒருங்கிணைப்பு**
★திரு.கா.புலேந்திரன் (விழாக்குழு சார்பில்
குடியேற்ற உத்தியோகத்தர்
ஒட்டுசுட்டான்

★திரு.சி.வேதவனம் (அறங்காவற்கழகம் சார்பில்)
செயலாளர்.

(சி-10087)

உயரம் பாய்தலில் ஈடுபடும் உக்ரேய்ன் நாட்டைச்சேர்ந்த அன்றிசொகொ வஸ்கி, பெண்களுக்கான தடை தாண்டல் போட்டியின் ஒரு பகுதியை முறையே காணலாம்.

# உயரம் பாய்தல் போட்டியில் சுவீடன் வீரருக்கு தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் உயரம் பாய்தல் போட்டியில் சுவீடனைச் சேர்ந்த ஸ்ரீபன் ஹொச் 2.36 மீற்றர் உயரம் பாய்ந்து தக்கப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

உயரம் பாய்தலில் அமெரிக்காவைச் சேர்ந்த கிம் ஷிங்டே 2.34 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், செக்குடியரசைச் சேர்ந்த ஜெரலோ வாவா வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தனர். இதேவேளை, முப்பாய்தல் போட்டியில் மூன்று முறை உலக சம்பியன் பட்டத்தை வென்ற சிறிஸ்ரியன் ஒஸ்லாசத் முப்பாய்தல் போட்டியில் 17.79 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கம் வென்றார். இப்போட்டியில் ருமேனிய வீரர் மரியன் ஒஸ்ரியா வெள்ளிப் பதக்கத்தையும், ரஷ்ய வீரர் டானியல் அபார்க் கினியா வெண் கலப்பதக்கத்தையும் வென்றெடுத்தனர்.

# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி~2004

## சீனா மீண்டும் முதல் இடத்தில்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் சீனா மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளது. நேற்று மாலை முடிவுகளின் படி சீனா அமெரிக்காவை இரண்டாவது இடத்திற்குத் தள்ளியிருந்தது.

சீனாவைவிட அமெரிக்கா ஒரு தங்கப்பதக்கத்தில் பின்னிலை பெற்றதால் அமெரிக்காவை சீனா இரண்டாவது இடத்திற்குத் தள்ளியது.

சீனா 22தங்கம், 14 வெள்ளி 10 வெண்கலங்களுடன் 46 பதக்கங்களைப் பெற்று முதல் இடத்திலும், அமெரிக்கா21 தங்கம், 22வெள்ளி,15 வெண்கலம் அடங்கலாக 58 பதக்கங்களைப் பெற்று இரண்டாவது இடத்திலும், ஜப்பான் 13 தங்கம், 6 வெள்ளி 7 வெண்கலம் அடங்கலாக 26 பதக்கங்களைப் பெற்று மூன்றாவது இடத்தையும் நேற்று மாலை பெற்றிருந்தன.

இந்நிலையில் அமெரிக்க சீன நாடுகளுக்கிடையில் நிலவிவரும் கடுமையான போட்டி எந்த நாடு முன்னிலை பெறப்போகிறது என்பதை அனைவரினதும் எதிர்பார்ப்பாக்கியுள்ளது.





## பின்செனட் சாதனை

படகு வலித்தல் போட்டியில் பிரிட்டன் வீரர் மேத்யூ பின்செனட் நான்காவது ஒலிம்பிக் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார். ஒலிம்பிக் படகு வலித்தல் 4 பேர் போட்டிகள், எதென்ஸ் அருகில் உள்ள ஷினியாஸ் பகுதியில் நேற்று முன்தினம் நடந்தது.

பிரிட்டன் அணியில், முன்னணி வீரர் மேத்யூ பின்செனட் பங்கேற்றார். இந்தப் போட்டியில் எதிர் பார்த்தது போலவே பிரிட்டன் தங்கம் வென்றது. 42 வயதாகும் மேத்யூ பின்செனட் கைப்பற்றும் நான்காவது ஒலிம்பிக் தங்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. தவிர ஒலிம்பிக் வரலாற்றில் படகு வலித்தல் போட்டியில் தங்கம் ஜெயிக்கும் வயதான போட்டியாளர்களில் ஒருவர் என்ற சாதனையும் படைக்கிறார்.

# உலகின் அதிவேக வீரர் பட்டத்தை ஸஸ்ரின் ஹாட்ரின் கைப்பற்றினார்



உலகின் அதிவேக வீரர் என்ற பட்டத்தை அமெரிக்காவின் ஸஸ்ரின் ஹாட்ரின் பெற்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஆடவர் 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 9.85 வினாடிகளில் குறிப்பிட்ட தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கம் வென்றார்.

நடப்புச் சம்பியன் மொறிஸ் கிரினுக்கு வெண்கலப் பதக்கமே கிடைத்தது.

பிரபல வீரர்கள் பலரை உள்ளடக்கியதாக அமைந்த இறுதிப் போட்டியில் 100 மீற்றர் தூரத்தை ஹட்லன் 9. 85 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார்.


போர்த்துக்கல் வீரர் பிரான்சிஸ் ஒபிக்வேலு 9.86 செக்கனில் போட்டியை நிறைவு செய்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

கடந்த முறை சிட்னியில் தங்கம் வென்ற மொறிஸ் கீறின் வெண்கலப் பதக்கத்தையே பெற்றுக் கொண்டார். 9.87 செக்கன்களில் அவர் குறித்த தூரத்தை நிறைவு செய்தார்.

இறுதிப் போட்டியில் பங்கு கொண்ட 8 போட்டியாளர்களில் ஐவர் பத்து செக்கன்களுக்கும் குறைவான நேரப் பெறுதியில் போட்டியை நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.




பெண்களுக்கான 20 கிலோ மீற்றர் நடைப்போட்டியில் தங்கம் வென்ற கிரீஸின் அதனசியா ரிசோமிலேகா.



நீளம் பாய்தல் போட்டியில் பங்கேற்கும் ஜமேக்காவின் கிளாஸ்ரன் பேமாட்.



குண்டெறிதல் பெண்களுக்கான போட்டியில் தங்கம் வென்ற ரஷ்யாவின் இறினா கோர்ஷ னென்கோ.



குண்டெறிதல் போட்டியில் பங்குபற்றும் புயிற்றோ றிக்கோவின் லுக்கி லியனோஸ்.



100 மீற்றர் போட்டியில் பங்கேற்கும் செக் குடியரசின் தோமஸ் டுவோறக் (இடது) ரோலன்ட் ஸ்க்வார்ஸ்.

# ஊக்க மருந்து உட்கொண்டார் கிரீஸ் வீரரின் பதக்கம் பறிப்பு

28 ஆவது ஒலிம்பிக் போட்டியை நடத்தும் கிரீஸுக்கு சனிக்கிழமை தலைகுனிவு ஏற்பட்டது. ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதாகப் பளுதூக்குதல் பிரிவில் கிரீஸ் வீரர் லியோனிடாஸ் சம்பானிஸ் பெற்ற வெண்கலப் பதக்கம் பறிக்கப்பட்டது. ஊக்க மருந்து பரிசோதனையில் சம்பானிஸ் ஊக்கமருந்து எடுத்துக் கொண்டது நிரூபிக்கப்பட்டதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. அதையடுத்து அவர் பெற்ற வெண்கலப்பதக்கம் பறிக்கப்பட்டது. 33 வயதாகும் சம்பானில் ஆடவர் 62 கிலோ எடைப்பிரிவில் இப் பதக்கத்தைப் பெற்றிருந்தார்.

## மழையால் பாதிப்பு

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் மும்முனை ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இரண்டாவது. போட்டியும் மழையால் பாதிக்கப்பட்டது. டக்வேத் - லூயிஸ விதிக்கமைய 32 ஓவர்கள் போட்டி மட்டுப்படுத்தப்பட்ட போதும் தொடர்ந்து பொய்த மழை போட்டியைப் பாதித்தது. நேற்றைய இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி 31.4 ஓவர்கள் பந்து வீசிய நிலையில் அவுஸ். அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# மரதனில் மிசூக்கி நைக்கூச்சிக்கு தங்கம்

## கோலோ றெஸ்ட்லைட் கண்ணீருடன் விலகல்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான மரதன் ஓட்டச் போட்டியில் பிரபல பிரித்தானிய வீராங்கனை கோலோ றெஸ்ட்லைட் சுற்றும் எதிர்பாரத வகையில் போட்டிகளில் இருந்து இடை விலகிக் கொண்டார்.

இதனை அடுத்து இப்போட்டியில் ஜப்பானிய வீராங்கனை மிசூக்கிநெக்கூச்சி தங்கப்பதக்கம் வென்றார்.

உலக சாதனையாளரான பிரித்தானிய வீரங்கனை கோலோ றெஸ்ட்லைட் ஆரம்பம் முதலே இப்போட்டியில் பிரகாசிக்கவில்லை. போட்டியை நிறைவு செய்வதற்கு ஆறு கிலோ மீற்றர் உள்ள நிலையில் றெஸ்ட்லைட் கண்ணீருடன் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார்.

அரைவாசித் தூரத்தில் இருந்தே முன்னணியில் திகழ்ந்த ஜப்பானிய வீராங்கனை 2 மணித்தியாலம் 26 நிமிடம் 20 செக்கனில் குறித்த தூரத்தை ஓடி முடித்து தங்கப் பதக்கத்தைத் தனதாக்கினார்.

## லக்கிஸ்ரார் வி. க. நடாத்தும் கால்பந்து, வலைப்பந்து போட்டி

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்து வலைப்பந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 24 அணி கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்கின்றன.

நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இப்போட்டியின் கால்பந்து இறுதிப் போட்டி 29 ஆம் திகதி மாலை 3 மணிக்கும், வலைப்பந்து இறுதிப்போட்டி மாலை 2 மணிக் கும் நடைபெறும்போட்டிகள் யாவும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய நடைபெறும் என ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இங்கிலாந்துக்கு 10 விக்கெட் வெற்றி


## தொடரையும் முழுமையாக கைப்பற்றியது



மேற்கிந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமா [illegible] டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 10 விக்[illegible]டுக்களால் வெற்றிபெற்றது.


முன்னதாக முதல் இனிங்சில் [illegible]ங்கிலாந்து பெற்ற 470 ஓட்டங்களுக்கு பதிலளி[illegible]து ஆடிய மேற்கிந்தியதீவு முதல் இனிங்சில்152 ஓட்டங்களையும் இரண்டாவதுஇனிங்சில் 321 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்படி வெற்றிபெறுவதற்கு 3ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் தமது இரண்டாவது இனிங்சை ஆடிய இங்கிலாந்து விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. நான்கு போட்டிகள் கொண்ட தொடரை மேற்படி வெற்றிமூலம் 4-0 என்ற நிலையில் இங்கிலாந்து கைப்பற்றியது.




பெண்களுக்கான இரட்டையர் டெனிஸ் போட்டியில் தங்கம் வென்ற சீனா. வீராங்கனைகளான லீரிங், சன்ரியங் ரியங் இணை மற்றும் துவிச்சக்கர வண்டிப் போட்டி யில் தங்கம் வென்ற நியூசிலாந்து வீராங்கனை சராஉல்மர் முறையே காணலாம்..

## சிந்தனைக்கு



நீதி நிருவாகமானது ஒரு வலுவான அரசிற்கும், கட்டுப் பாடான சமூக அமைப்பிற்கும் ஆணிவேரானது.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-08-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## குற்றவாளிகளின் குகையாக.....!

"பெரும்குடி மக்கள்"வாழும் நாடு என ஏற்கனவே பெயர் பெற்றுவிட்ட சிறிலங்கா தற்பொழுது குற்றங்கள் நிறைந்த குகையாகவும் மாறிவிட்டது. ஒவ்வொரு ஒன்பது நிமிடத்திற்கும் ஒரு குற்றச்செயல் இடம்பெறுவதாகவும், ஆறு மணித்தியாலயத்திற்கு ஒரு கொலை, ஆறரை மணித்தியாலயத்திற்கு ஒரு பாலியல் வல்லுறவு எனக் குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாகவும் சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதன் பின்னர் 617 கொலைகளும், 417 ஆட்கடத்தல் சம்பவங்களும், 817 பாலியல்வல்லுறவுச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சரான சனாதிபதி சந்திரிகா மீது ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இத்தகைய குற்றச் செயல்கள் அதிகரிப்பிற்கு நாட்டில் சட்ட ஆட்சி சீர்குலைந்து போனமையே காரணம் என்பது வெளிப்படையானது. குறிப்பாக பொலிஸ் மற்றும் நீதித்துறையில் ஏற்பட்டுள்ள இலஞ்சம் மற்றும் முறைகேடுகள் இதற்கு முக்கியமான காரணமாகும். அண்மைக்கால ஆய்வொன்று இலங்கையில் ஊழல் மற்றும் இலஞ்சமோசடி நிறைந்த துறைகளில் பொலிஸ் மற்றும் நீதித்துறையே முன்னணி வகிப்பதாக தெரிவிக்கின்றது.

ஆனால் இத்தகையதொரு சூழ்நிலை உருவாவதற்கு சிறிலங்காவின் அரசியல் வாதிகளே காரணமாகும். குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகள் கடைப்பிடித்த இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளே இத்தகைய சூழ்நிலை வளர்ச்சிகாணக் காரணமாகும். அதாவது பொலிஸ்,நீதித்துறையில் ஊழல்மோசடி பெருகவும், நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரிக்கவும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் காரணமாகின.

ஒருவகையில் பார்க்கையில் இனவாத நோக்கில் செயற்பட்ட அரசாங்கங்கள், பொலிஸ் மற்றும் ஆயுதப் படைத்தரப்பிற்கு மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்கின. இவை பொலிஸ் மற்றும் ஆயுதப் படைத்தரப்பின் அராஜகங்களுக்கு வழிவகுத்ததோடு இலஞ்சம், ஊழலுக்கும் வழிவகுத்தது. இது நீதித்துறைக்கும் பொருத்தப்பாடானதாக இருந்தது.

அதாவது காரணமின்றிக் கைது செய்யவும், சிறையில் அடைக்கவும் சட்டமும், நீதித்துறையும் இடமளிக்கையில் பொலிசார் தமது தேவைகளுக்காக கைதுசெய்யவும், விடுதலை செய்யக்கூடியதுமானதொரு சூழ்நிலை தோற்றம் பெற்றது. இது இலஞ்சம் மோசடிகளுக்கு வழிவகுப்பதாக இருந்தது.

இன்னொரு புறத்தில் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தையே தீர்வுமார்க்கமாகத் தெரிவு செய்தமையால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமானதொரு கட்டத்தை அடைந்தது. ஒரு புறத்தில் மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியது. இத்தகையதொரு நிலை குற்றச்செயல்களை (களவு, திருட்டு) போன்றவற்றை அதிகரிக்கச் செய்வதுண்டு. இதனைத் தவிர வேறொரு வகையிலும் இலங்கையின் யுத்தமானது நாட்டில் குற்றவாளிகளை உருவாக்கும் தொழிற்சாலை போன்றும் இருந்தது.

குறிப்பாக எதுவித வரம்புகளுமின்றி இராணுவத்திற்குச் சேர்க்கப்பட்ட இளைஞர்கள்– யுத்தத்தின் தீவிரத்திற்கு ஈடுகொடுக்க முடியாது தப்பியோடினர். இவர்களில் அனேகர் ஏற்கனவே குற்றச்செயல்களின் பின்னணியிலிருந்து இராணுவத்தில் இணைந்து கொண்டவர்கள். இவர்கள் தப்பியோடும் போது தீவிரஆயுதப் பயிற்சியைப் பெற்றவர்களாகவும் ஆயுதங்களை தம்மகத்தே கொண்டவர்களாகவும் இருந்தனர். அதாவது ஆயுதங்களுடன் தப்பியோடியமையால் அவர்களுக்கு இவ்வசதி கிட்டியது.

அதேவேளை ஆயுதப்படையிலிருந்து தப்பியோடியவர்களுக்கு நாட்டின் சீரழிந்து போன பொருளாதார நிலையும் அங்கு வளர்ச்சி கண்டுவந்த பாதாள உலக நடவடிக்கைகளுமே சந்தர்ப்பத்தை வழங்குபவையாகவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்பவையாகவும் இருந்தன. இந்நிலையில் குற்றவாளிகளும் பெருக குற்றச் செயல்களும் கட்டுக்கடங்காத வகையில் பெருகத் தொடங்கியது. ஒரு மரண வீட்டிற்குள் புகுந்து இறந்தவரின் நான்கு சகோதர சகோதரிகளைச் சுட்டுக்கொல்லும் அளவிற்கு அராஜகச் செயல்கள் அதிகரித்துள்ளன.

ஆனால் ஆட்சியாளர்களோ இவற்றைக் கண்டு கொண்டதாக இல்லை. மாறாக இவற்றை ஊக்குவிப்பவர்களாகவே உள்ளனர். ஏனெனில் இன்று அவர்களுக்கு இத்தகைய பாதாள உலகக் குழுக்களும், குற்றவாளிகளும் தேவையானவர்களாக உள்ளனர். சிறிலங்கா ஆட்சியாளர்களின் மெய்ப்பாதுகாவலர்களிலும், அவர்களின் அடியாட்களிலும் இத்தகைய குற்றவாளிகளே நிறைந்துள்ளனர்.

அதாவது சட்டம் ஒழுங்கைச் சீர்ப்படுத்த வேண்டியவர்களும் இலஞ்ச– ஊழல் மோசடிகளை ஒழிக்க வேண்டியவர்களும் இத்தகைய செயலில் ஈடுபடுகையில் எவ்வாறு நாட்டில் குற்றச்செயல்கள் குறைவடையும்? இனவாதத்தை அரசியல்வாதிகள் தமது அரசியல் மூலதனமாக்கி அரசியல் இலாபம் தேடமுற்படும் வரையில் நீதி என்பது இரண்டாம் பட்சமானதாகிவிடுவது தவிர்க்கப்பட முடியாததே. இந் நிலையானது குற்றவாளிகள் பாதுகாப்புத் தேடவும், சுகந்திரமாகச் செயற்படவும் வாய்ப்பளிப்பதாகவே இருக்கும்.

# தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் ஒரு தரப்பினருக்கு மட்டுமே நன்மை

## சிறில.பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒரு தரப்பினருக்கு மாத்திரமே நன்மை அளிக்கக் கூடியதென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அரச படையினர் மத்தியில் நேற்று உரையாற்றும் போதே ரட்ணசிறி விக்கிரமநாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு இது தொடர்பாகத் தெரிவிக்கையில்; இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒரு தரப்பினருக்கு நன்மை அளிக்கக்கூடியது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் எங்கள் பிரதேசங்களுக்கு வந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முழு உரிமை இருக்கின்றது.

இதனை யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்கிறது. இதேவேளை இந்த ஒப்பந்தத்தில் இரண்டு பிரிவினரின் கீழ் இரண்டு பிரதேசங்கள் இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதேசமாக இருந்தாலும் அவை எமக்குச் சொந்தமாக இல்லை.

அரசியல் செயற்பாடுகளுக்கு வருவதாகக்கூறி அந்த ஒப்பந்தத்தின் கீழ் வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஒரு நாட்டினுள் இன்னொரு நாடிருக்க முடியாது. அதேபோன்று இராணுவமும், பொலிஸ், நீதிமன்றம் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பும் இருக்க முடியாது.

தவறிழைத்தபின்னர் தவறிழைத்த தரப்பினர் மீது நட வடிக்கை எடுக்க யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினருக்கு உரிமை இருக்கவேண்டும். அந்த உரிமை இன்றில்லை.

இதேவேளை அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் சரியாகச் செயற்படவில்லையாயின்-அவர்களின் அதிகாரத்தைப் பிரயோகிக்க வில்லையாயின் நாம் மற்றவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய் செயற்திட்டத்திற்கு வர வேண்டிய நிலைகுறித்து அரசாங்கம் யோசித்து வருகின்றது எனவும் பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நேற்றுக்காலை சி.ஏச்.596 ரக உலங்குவானூர்தியில் வன்னி இராணுவ தலைமையகத்திற்கு வந்த அவர் வன்னி இராணுவத்தளபதி சிசிரவிஜயசூரிய அடங்கிய குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் பின்னர் இராணுவம், பொலிசார் விமானப்படை, கடற்படை அதிகாரிகளின் முன்னிலையில் உரையாற்றினார். இதன் பின்னர் தள்ளாடி இராணுவ முகாமுக்கு உலங்குவானூர்தி மூலம் அவர் சென்றார்.(21)

# மட்டக்களப்புச் சம்பவங்கள் யுத்த நிறுத்தத்தைப் பாதிக்காது

## ஜப்பானியத் தூதுவர் மட்டக்களப்பில் தெரிவிப்பு

மட்டக்களப்பில் அண்மையில் நடந்த சம்பவங்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை எந்த விதத்திலும் பாதிக்காதென இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா தெரிவித்துள்ளார்.

மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு மட்டக்களப்பிற்கு நேற்று மாலை சென்ற இவர் அங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு கூறினார்.

இதன்போது தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம், சமாதானக் குழுப் பிரதிநிதிகள் மற்றும் மட்டக்களப்புப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் சமரதீவாகரவையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

இவர் மட்டக்களப்பின் இன்றைய நிலவரம் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டதாகக் கூறப் படுகிறது.

# வவுனியா மாவட்டத்தில் வரட்சியால் 22 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் வரட்சி காரணமாக 22 ஆயிரத்து 805 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக வவுனியா அரச செயலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவென்று 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிதியில் 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா குடி நீருக்காக ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும், குடிநீர் வழங்குவதுக்காக 20 தண்ணீர் தாங்கிகளும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவில் உள்ள பெரும்பாலான குளங்கள் முற்றாக வற்றிய நிலையில் இருப்பதும் இதன் காரணமாக விவசாயம் பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (21)

# கிராம சேவை அலுவலகரின் கடமை நேரத்தில் மாற்றம்

(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராமசேவை அலுவலர்களின் கடமை நேரத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதற்கமைய கிராமசேவை அலுவலர்கள் புதன்கிழமை மற்றும் ஓய்வு தினங்கள் தவிர வாரத்தின் சகல நாட்களிலும் 8.30 தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை கட்டாயம் அவர்கள் அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும்.

இதேவேளை கிராமசேவை அலுவலர்கள் கடமை நேரத்தில் அவசிய உத்தியோகபூர்வ அலுவல் காரணமாக வெளியே செல்ல வேண்டி ஏற்பட்டால் பிரதேச செயலாளர்களிடம் இருந்து முற்கூட்டியே அனுமதியைப்பெற வேண்டுமெனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் கிராமசேவை அலுவலர் வேறு ஒருபிரிவில் சேவையாற்ற வேண்டி ஏற்படும் பட்சத்தில் அது பற்றி பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

உள்நாட்டு அலுவலகத்தினால் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை சகல மாவட்ட செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும், அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சச்சிமாஸ்ரர் கொலை குறித்த சந்தேக நபருக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கருணா குழுவின் சச்சி மாஸ்ரர் உட்பட இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக்கூறப்படும் முதலாவது சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் பாதுகாப்புக் காரணங்களுக்காக எனக் கூறி நேற்று நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட வில்லை.

இதேவேளை இந்த வழக்குடன் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவரான இரண்டாவது சந்தேக நபரான சிறைச்சாலை உத்தியோகத்தர் உட்பட இருவரது விளக்கமறியலும் எதிர்வரும் 6ஆம் திகதிவரை நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் இந்த வழக்கின் முதலாவது சந்தேக நபரான மகேந்திரன் புவிதரனின் வாக்குமூலத்தை நேற்று முதல் வரும் இருபத்தெட்டாந்திகதி வரை பதிவு செய்யப்பட்டு நீதவான் நீதிமன்றம் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொலைச் சந்தேக நபர் புத்தளத்தில் கைது

(கொழும்பு)

பல கொலைகள், கொள்ளைகளுடன் சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுவின் தலைவர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

தெற்கில் இடம் பெற்ற தொடர் கொலைகள் தொடர்பாக தேடப்பட்டு வந்த இவரை புத்தளம் பகுதியில் வைத்து பொலிசார் கைது செய்துள்ளனர்.

"வம்பொற்ற" என அழைக்கப்படும் இந்நபர் ஆமிசுராங்கா என்பவரின் தலைமையில் பத்துக் கொலைகளையும், எண்பது ஆயுதக்கொள்ளைகளையும் நடத்தியவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# சமாதானமும் யுத்த நிறுத்தமும் இன்றைய ஆட்சியில்
# அபாயமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் சமாதானமும் யுத்த நிறுத்தமும் அபாய நிலைக்குச் சென்றுள்ளதாக ஐ.தே.க. வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோதே யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டன.

அப்போது தமிழ் மக்கள் உரிய முறையில் மீள் குடியேற்றங்களை மேற்கொண்டு வந்தனர்.

அதேவேளை, ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டித் தீர்வை நோக்கி தமிழ் மக்கள் முழுமையாகத் தம்மை அர்ப்பணிக்கக் கூடிய வாய்ப்பைக் கொண்டிருந் தார்கள்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் எல்லாமே மாறுதல் கண்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இந்த இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தங்களுடைய முழுமையான, தெளிவான கொள்கையை வெளியிடுமானால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்குவது தொடர்பாக ஆராயுமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது சமாதான முயற்சிகளை முன்கொண்டு சென்றது.

அதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார முன்வரைபையும் அப்போது சமர்ப்பித்தார்கள்.

விடுதலைப்புலிகளால் இடைக்காலத் தன்னாட்சி அதிகார முன்வரைபைச் சமர்ப்பித்தபோது ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு நேரடியாகவே பதிலையும் சொல்லியது.

அதாவது, அரசாங்கம் சமர்ப்பித்துள்ள இந்த இடைக்கால நிர்வாகத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரத்திற்கும் இடையே அடிப்படை அம்சங்களிலேயே வித்தியாசமுள்ளது என அன்றைய அமைச்சராக இருந்த ஜீ.எல். பீரிஸ் சொன்னதையும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறான நிலையிலும் கூட தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஐக்கிய தேசியக்கட்சி முன்வந்தது.

எனவே, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி இருந்தது.

எனினும், தற்போதைய அரசாங்கம் அவ்வாறில்லாமல், தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள கோரிக்கைக்கு எதிராக தாம் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்தச் சமாதானப் பிரச்சினையை இழுத்தடிக்கின்ற வெறுக்கத்தக்க நடவடிக்கையைச் செய்து கொண்டிருக்கின்றது. இதன் மூலம் நாட்டில் ஒரு அபாய நிலை தோன்றும் வாய்ப்பும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே, அரசாங்கம் உடனடியாக இவற்றை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அதில் கேட்கப்பட்டுள்ளது.

## ஏதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 23 | 25 | 17 | 65 |
| சீனா | 23 | 15 | 11 | 49 |
| ரஷ்யா | 6 | 15 | 18 | 39 |
| அவுஸ்திரேலியா | 13 | 09 | 13 | 35 |
| ஜப்பான் | 15 | 07 | 08 | 30 |
| ஜேர்மனி | 08 | 10 | 11 | 29 |
| பிரான்ஸ் | 09 | 07 | 09 | 25 |
| தென்கொரியா | 06 | 10 | 05 | 21 |
| பிரிட்டன் | 07 | 08 | 07 | 22 |
| இத்தாலி | 07 | 06 | 07 | 20 |
| நெலர்லாந்து | 03 | 06 | 08 | 17 |
| உக்ரெயின் | 07 | 02 | 05 | 14 |
| ருமேனியா | 07 | 04 | 03 | 14 |
| பெலாரஸ் | 02 | 03 | 06 | 11 |
| ஸ்பெயின் | 01 | 06 | 02 | 09 |
| கிரீஸ் | 05 | 02 | 02 | 09 |
| ஹங்கேரி | 03 | 04 | 01 | 08 |
| கியூபா | 01 | 01 | 06 | 08 |
| போலந்து | 02 | 02 | 03 | 07 |
| பல்கேரியா | 01 | 01 | 05 | 07 |
| டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| செக்குடியரசு | 00 | 03 | 03 | 06 |
| சிலோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| கனடா | 01 | 03 | 01 | 05 |
| ஆஸ்திரியா | 00 | 04 | 01 | 05 |
| சுவீடன் | 03 | 00 | 01 | 04 |
| துருக்கி | 03 | 00 | 01 | 04 |

## கலந்துரையாடல்

உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான முக்கியமானதும் அவசரமானதுமான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெறவிருப்பதால் இதில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி முல்லை. மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் பிறையாளன் கேட்டுள்ளார். (08)

## கைதுசெய்ய உத்தரவு

பிரதேச செயலர் ஒருவரை உடனடியாகக் கைது செய்யுமாறு பொலிசாருக்கு சனாதிபதி புலனாய்வுப் பிரிவினர் பணிப்புரை விடுத்துள்ளனர். பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்கென ஒதுக்கிய இடத்தில் இருந்து ஒரு மரத்தை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியமைக்காக உள்ளூர் பிரதேச செயலரை உடனடியாகக் கைது செய்யுமாறு வெல்லவாய பொலிசாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## மாவீரன் பண்டாரவன்னியனின் 201 ஆம் ஆண்டு நிறைவு வெற்றி நிகழ்வு

வன்னி மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 201ஆம் ஆண்டு நினைவு நிறைவு வெற்றி விழா நிகழ்வுகள் நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கற்சிலைமடு பண்டாரவன்னியன் உருவச்சிலை அமைந்துள்ள வளாகத்தில் நடைபெறும்.

முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் 4.00 மணிக்கு எழுச்சி ஊர்வலம் மாவீரன் பண்டாரவன்னியனின் கற்பொறிப்பு வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி நினைவுச் சிலை வளாகத்தில் நிறைவு பெறும்.


ஊர்வலமானது மாவீரன் பண்டாரவன்னியனின் உருவப்படம் தாங்கி நகர காவடி, கும்மி குடமூதல் குதிரையாட்டம், கோலாட்டம் ஆகிய பாரம்பரிய கலைநிகழ்வுகள் எழுச்சிபெற வைக்கும் வகையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்வதற்கான வாகன ஒழுங்குகள் அறிவிக்கப்பட்டுள்ளன. நாளை மதியம் 1.00 மணிக்கு முல்லைத்தீவு, முள்ளியவளை கலைஞர்களை ஏற்றிச் செல்வதற்கான பேருந்து அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் செயலகங்களில் இருந்து புறப்பட்டு கலைஞர்களுடன் கற்சிலை மடுவைச் சென்றடையும் தொடர்ந்தும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லும் மக்களுக்கான பேருந்து அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர் செயலகங்களில் இருந்து பி.பகல் 1.30 மணிக்குப் புறப்படும் கரைதுறைப்பற்று துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகங்களில் இருந்து 1.00 மணிக்கு புறப்படவுள்ளது. அத்தோடு செம்மலை, மாங்குளம் போன்ற பகுதிகளில் இருந்தும் பேருந்துகள் பி.பகல் 1.30 மணிக்கு ஒட்டுசுட்டான் கற்சிலைமடுவை நோக்கிப் புறப்படுகின்றன என முல்லை மாவட்ட அரச அதிபரும், பண்டார வன்னியன் அறங்காவல் தலைவருமான திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார். (20)

## காந்தரூபன் அறிவுச்சோலையில் இரு நாள் கல்விக்கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லப் பிள்ளைகள் நடாத்தும்



கல்விக்கண்காட்சி நேற்று காந்தரூபன் அறிவுச்சோலையில் ஆரம்பமாகியது.நேற்று 10.00 மணிக்கு காந்தரூபன் அறிவுச்சோலை கற்கும் கூடத்தில் ஆரம்பமாகிய இக் கண்காட்சியின் ஆரம்பநிகழ்வில் மங்கல விளக்கினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், மோகன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து கண்காட்சி மண்டபத்தின் நாடாவினை கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெட்டித்திறந்து வைத்தார்.

தொடர்ந்து சிறுவர்களின் ஆக்கத்திறன்களைப் போராளிகள், பெற்றோர்கள் எனப் பார்வையிட்டதுடன் சிறுவர்களின் திறமைகளைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.இக் கண்காட்சி இன்று நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (தீ,லோ)

### ஆயுதக்...

சோதனைச் சாவடியில் தமது பெயர்களைப் பதிவு செய்துவிட்டு மேற்கண்டோர் சோதனைச் சாவடியில் இருந்து வரும்போது சோதனைச் சாவடியில் இருந்து பதினைந்து மீற்றர் தூரத்தில் வைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. என்பதோடு, குயிலின்பனின் சந்தேகத்திற்கிட மற்ற தகவலின் பிரகாரம் இராணுவத்திடம் பெயர்களைப் பதிவு செய்த உடனேயே தாக்குதல் நடத்தியவர்களுக்கு பெயர் விபரங்கள் சென்றடைந்துள்ளன. அத்துடன் பெயர்களைப் பதிவு செய்யும்போது பெண் போராளியைப் பார்த்து இராணுவத்தினர் கைகொட்டி எள்ளி நகையாடியுள்ளனர்.

தாக்குதலை நடத்திய பிரதேசம் இராணுவ முகாமிற்கு அண்மையான இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதும் இரண்டு இராணுவச் சோதனைச் சாவடிகளுக்கு இடையே சொற்ப தூரமுள்ள ஒரு பிரதேசம் என்பதும் இராணுவமே இத்தாக்குதலுக்கு உதவியுள்ளது என்பதற்கான தெளிவான சான்றாக இருப்பதாக மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி இராணுவப் புலனாய்வப் பிரிவே மட்டக்களப்பில் இவ்வாறான தாக்குதல்களை நடாத்தி வருகின்றது என தமிழ்ச் செல்வன் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளார்.

இராணுவக் கட்டுப் பாட்டுப்பகுதியில் நிராயுதபாணிகளாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப் பட்ட இத்தாக்குதலானது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலென விடுதலைப்புலிகள் கண்காணிப்புக் குழுவிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற இடம் மற்றும் நடைபெற்ற விதம் போன்ற விடயங்கள் இந்தத் தாக்குதலுடன் இராணுவத்தினர் சம்பந்தப் பட்டிருப்பதை தெளிவாக்கியுள் ளன.

ஆத்திரமூட்டும் இவ்வாறான தாக்குதல் நடவடிக்கையானது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கே ஆபத்தாகிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்தும் நாங்கள் பொறுமை காப்பதை இராணுவத்தினர் பலவீனமாகக் கருதக் கூடாது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை இராணுவம் இதுபோன்ற சமாதான நடவடிக்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது இது முதற் தடவை அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் 1.8 ஷரத்தினை நிறைவேற்றுதல் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கத்தின் எண்ணம் பற்றி உங்களுடனான கலர்துரையாடலில் ஏற்கனவே கூறியுள்ளோம்" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காணாமற்...

வடமராட்சி கிழக்கை சேர்ந்த மீனவர்கள் அவர்களைப் படகில் இழுத்துக்கொண்டு சுண்டிக் குளக் கரைக்கு அண்மையாகக் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளனர். இதன் பின்னர் நேற்றுப் பகல் 12.00 மணியளவில் சுண்டிக்குளத்தைச் சேர்ந்த மீனவர்கள் இவர்களைக் கண்டு தமது படகுடன் கட்டிக் கரை சேர்த்துள்ளனர். இவர்கள் இருவரும் எதுவித இடையூறுகளும் இன்றி வீடு வந்து சேர்ந்துள்ளனர்.

இதேவேளை காணாமற் போன சம்பவம் குறித்து முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்களின் சமாசம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (08)

### போர்...

இதனை அடுத்து நேற்றுப்பகல் கொழும்பிற்குத் திரும்பிய அவர் இன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தமது முறைப்பாட்டைத் தெரிவிப்பதுடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (32)

### வவுனியா...

மண்டை ஓடானது மேல் தாடையிலும், கீழ்த்தாடையிலும் தலா 14 பற்களை கொண்டுள்ளதுடன் மண்டையோட்டில் நான்கு வெடிப்புக்களும் காணப்படுகின்றது. இந்நபர் ஆறுமாதத்திற்கு முன்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்த எலும்புக்கூட்டிற்குரியவர் ஆணா, பெண்ணா என்பது தொடர்பாகவும், கொலை எவ்வாறு நடந்துள்ளது என்பது தொடர்பாகவும், அறிய எலும்புக்கூட்டினைக் கண்டியில் உள்ள உடல் கூற்றியல் நிபுணருக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் இளஞ்செழியன் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.குற்றத்தடுப்பு பதில் பொறுப்பதிகாரி ரட்ணாயக்க தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (21)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.